# கால் நடையில் 28,000 மைல்கள்

CONNEMARA PUBLIC LIBRARY
13 JUL 1957
MADRAS

by RAJAGOPAL (T.K.)

ஆசிரியர், வெளியிடுபவர் :

டி. கே. இராஜகோபால் (உலக யாத்ரீகர்)
கால் நடையில் பல நாடுகளைச் சுற்றியவர்

1954] [விலை ரூ. 1.

| | |
|---|---|
| முதற் பதிப்பு, மார்ச் | 1950. |
| இரண்டாம் பதிப்பு, செப்டம்பர் | 1950. |
| விரிவான மூன்றும் பதிப்பு, மார்ச் | 1951. |
| நான்காம் பதிப்பு, டிசம்பர் | 1951. |
| ஐந்தாம் பதிப்பு, மார்ச் | 1953. |
| ஆறும் பதிப்பு, செப்டம்பர் | 1954. |


உரிமை ஆசிரியருக்கே.]

R·B 90
2-55

67716

U8·1'N5
31J4

என் முகவரி :

D. K. Rajagopal, World Tourist,
No. 1. Aiyasami Chetty Street,
Triplicane, MADRAS-5.

Printed at the M. V. S. PRESS, Madras-1.

CONNEMARA PUBLIC LIBRARY
13 JUL 1957
MADRAS

ஸமர்ப்பணம்:

என் பிரிவால் ஏக்கமுற்று உயிர் நீத்த என்
அருமைத் தாயாருக்கு.

29 ம்-பக்கம் பார்க்கவும்.



டி. கே. இராஜகோபால்

உலக யாத்ரீகர்.

13 JUL 1957
MADRAS

# பதிப்புரை

உங்கள் கையிலிருக்கும், இந்த ஆறும் பதிப்பு ஒரு வேளை தமிழ் நாட்டில், கடைசி பதிப்பாக இருக்கலாம். முதல் இரண்டு பதிப்பில் நான் அளித்த வாக்குறுதியின் படி முறையே, மூன்றும், நான்காம், ஐந்தாம், ஆறும் பதிப்பு களில், அனேகப் படங்களும், விஷயங்களும் சேர்த்துள் ளேன். இப் பதிப்பில் உள்ள யாவும் என் சொந்த அனுபவ மும், நான் நேரில் கண்டவைகளுமே தவிர, கற்பனையால் எழுதப்பட்டதல்ல, நான் ஓர் எழுத்தாளனல்ல. ஆனால் ஓர் யாத்ரீகன். அனுபவமற்ற என் எழுத்தில், குற்றம் குறைகள் இருந்தால், அதை மன்னிக்கும்படி தாழ்மையுடன் கேட் டுக் கொள்கிறேன்.

முறையே நான்கு பதிப்புகளையும், ஆங்கில பதிப்பையும் சிரமம் பாராது அச்சிட்டு தந்த திரு. V. பாலசுப்பிரமணி யம் அவர்களுக்கும் ஐந்தாம் பதிப்பை அச்சிட்டுத் தந்த திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் இந்தபதிப்பைஅச் சிட்டுத் தந்த, M. V. S. Press அதிபர்களுக்கும் என்நன்றியை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் நாட்டு மக்கள் முக்கியமாய் மாணவ, மாணவிகள் இதை வர வேற்பார்கள் என்று நம்புகிறேன். குறைந்த விலையில் நிறைந்த விஷயங்கள் கொடுக்க வேண்டும் என்பது தான் என் ஆவல். ஆனால் அதற்கேற்ற வசதியில்லை யென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை.
9–9–54.

டி. கே. இராஜகோபால்
உலக யாத்ரீகர்.

அன்பே சிவம்

8—11—1949

எழுதுவோர்: திருவாவடுதுறை ஆதீனச் சைவப் பிரசாரகர் வித்துவான் மறை. திருநாவுக்கரசு. (மறைமலை அடிகளின் மகனார்) தலைமைத் தமிழாசிரியர், திருவருள் ஹைஸ்கூல், குலசேகரன் பட்டினம் பி. ஒ. தி. நெ. ஜில்லா.

உலகஞ் சுற்றும் அருஞ் செயல் வீரர்

திரு. டி. கே. ராஜகோபால் அவர்களைப் பற்றிய

**நற்சான்று**

திரு. டி. கே. ராஜகோபால் அவர்களை யான் நன்கறிவேன். பாரத நாட்டுச் சுதந்திரத்திற்குப் பல பணிகள் செய்து பன்முறை சிறை சென்ற தியாகி இவர். காலிலேயே உலகை வலம் வர வேண்டுமென்றும் ஆர்வம் பெற்ற இவர் பர்மா, இந்தியா, இமாலய நாடுகள், இலங்கை முதலிய நாடுகளிலும், அந்நாடுகளிலுள்ள அடர்ந்த பெருங்காடுகளிலும் தனியாக பன்னாட்கள் பல மாதங்கள்—ஆண்டுகள் சுற்றித் திரிந்திருக்கின்றார். அஞ்சா நெஞ்சமும், மன உறுதியும் மிகுந்த இவர், தாம் கண்டவைகளை அழகாக எடுத்துச் சொல்லும் ஆற்றலும் பெற்றிருக்கின்றார். இவரின் அரும் செயல் மாணவர்கட்கு வீரத்தையும், அறிவையும் தன்னம்பிக்கையும் ஊட்டும்.

இவரிடம் நெருங்கிப் பழகியதால் அறிந்தது இவர் உண்மையே பேசுபவர்; இரக்கமும் அன்பும் உடையவர்; நல்ல நிலையில் வாழ்ந்தவர்; பல தர்மத்திற்கு ஏராளமாக நன்கொடை புரிந்தவர்; பல தொழில்களையும் திரம்படச் செய்யக் கூடியவர்; கடமையும், உணர்ச்சியும் எடுத்து முடிக்கும் ஆற்றலுடையவர் என்பதனை எல்லாம் யான் நன்கு அறிந்திருக்கிறேன்.

அருமையான பல தொழில்களை இவர் அறிந்திருக்கிறார். அவற்றால் நன்றாகச் சம்பாதித்தார். ஆனால் அருஞ் செயற் கலையில் ஒன்றாகிய "தேச சஞ்சாரம்" என்னும்

கலையை வளர்க்கும் ஆர்வத்தினாலேயே பல துன்பங்களையும் சகித்து உலகஞ் சுற்றும் அரும் பெரும் செயலை இவர் மேற்கொண்டிருக்கின்றார். அதற்கான அருங்குணங்கள் யாவும் இவரிடத்து உள்ளன. நாடுகள், காடுகள், மலைகள் வேறு, நாட்டு மக்களின் போக்குகள், தொழில்கள், வளங்கள், இயற்கை அழகுகள் இவற்றை எல்லாம் மாணவர்களும் பிறரும் படிப்பதாலும், கேட்பதாலும் மட்டும் போதிய பயனை அடைய முடியாது. நேரில் அனுபவித்தறிந்த ராஜகோபாலனிடம் அறிவதே எளிதாகும்.

ஆதலால், இவரைப் பல வகையிலும் பெரியோர்களும் அறிஞர்களும், நாட்டுத் தலைவர்களும், பத்திரிகைகளும் ஆதரித்தல் நாட்டுக்கு நன்மை தருவதாகும். மேலும் இவர் இப்போது ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களை நடையால் சுற்ற• முனைந்திருக்கிறார். அதத்கு ஏராளமான பொருள் வேண்டும்! அன்றியும் தாம் கண்டவைகளை எழுதியிருக்கின்றார். அவைகளை நூலாக வெளியிடவும் பொருள் வேண்டும். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், இவர் பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்து நிதி உதவ வேண்டும். அரசாங்கத்தாரும், பொது மக்களும், பொது சபைகளும் உதவ வேண்டும்,

இப்புடிப் பட்டவர் மேனாட்டிலிருந்தால் எவ்வளவோ உதவியும், புகழும் பெறுவர். ஆனால் நம் நாட்டிலோ இவர் வறுமையால் வாடுகின்றார். ஆதரிப்பார் இல்லாமல் எடுத்தது முடிக்க வியலாமல் வருந்துகின்றார். இவர் தாம் கூறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், செய்திக்கும் தன் சரித்திரத்துக்கும் எழுத்து மூலம் சாட்சியங்கள் வைத்திருக்கின்றார். அன்பர்கள் பெரியோர்கள் அவற்றை எல்லாம் கண்டும், கேட்டும் ஆவன புரிய வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
மறை. திருநாவுக்கரசு,
தமிழ்ப் புலவர்.

L.K Bharati MABL.
M.D.

13, Band Bungalow,
Govt House: Mountroad
Madras—2.
22.10.1950.

I know ~~Mr.~~ D.K. Rajagopal very well now for over 17 years. During the national struggle days, I found him serving the cause of the country in a manner that endeared him to me and members of my family to the extent of giving him shelter and food in my house at Mathurai.

He was then seized with an intense desire to trot the globe on ~~[illegible]~~ foot. With faith in God, and with remarkable determination, he has now hiked a distance of 28,000 miles. He wants to continue the arduous feat of globe-trotting on foot and thus earn for our country the record of being the first Indian to do so.

The task is no easy joke. It is the spirit of adventure that sustains him in this hazardous enterprise.

He is earnest and sincere in his attempt to ~~complete~~ realise his ambition. It is up to us all encourage this spirited young man in all possible ways.

I wish him success and God-speed.

Madras.
22.10.1950

L Krishnaswami Bharati

திரு. L. K. பாரதி அவர்கள் கடிதம்

13 JUL 193
MADRAS

# நன்றியுரை

அன்னிய நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்து மூன்று வருடமாகிறது. தமிழ் நாட்டு மக்கள் என் செயலுக்கு ஆதரவு காட்டுவார்கள் என்று நினைத்துப் பல கோடீஸ்வரர்களையும், நல்ல நிலையில் உள்ளவர்களையும் நாடினேன். ஆயினும் பலன் ஒன்றுமில்லை.

என் யாத்திரையின் பலனை நான் மட்டும் அனுபவித்தால் பிரயோஜனம் இல்லை. மாணவ, மாணவிகளும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நூற்றுக் கணக்கான பள்ளிக்கூடத்தில் பேசினேன். சிலர் ஆதரவு காட்டினார்கள். அவர்களுக்கு என்னால் ஒன்றும் செய்யா முடியா விட்டாலும் இச்சிறு நூலில் குறிப்பிடாமல் இருப்பது அழகல்ல. நான் மறைந்தாலும் கூட அவர்கள் செய்த உதவி மறையாமல் இருக்க் இதில் குறிப்பிடுகிறேன்.

ஆறு மாதம் மெரினா கடற்கரையில் என் கூடாரம் இருந்தது. அப்பொழுது ஊர், பேர் தெரியாத அனேகர் எனக்குப் பல விதத்தில் உதவி புரிந்தனர். அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும். அத்துடன் கால் நடையாக உலகம் சுற்ற வேண்டும் என்று விரும்பியும், தன்னால் முடியாமற் போன காரியத்தை நான் செய்த யாத்திரையைப் பாராட்டி, ஒருவர் எனக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி, அத்துடன் நான் இதை நிறுத்தாமல் மேற்கொண்டு யாத்திரை செய்ய வேண்டும் என்று விரும்பி, எனக்கு ஏராளமான பொருள் சன்மானம் அளித்தார். இவரைப் போல் தமிழ் நாட்டில் யாரும் செய்தது கிடையாது. அவர்பெயர் திரு. B. கிருஷ்ணசாமி, இவர் ஈரோட்டில் இருக்கிறார்.

1938-ல் வட நாட்டில் ஒரு தமிழ் அன்பரைக் கண்டேன். அவர் ஒருவரே அந்த ஊரில் எனக்கு உதவி புரிந்தார். அத்துடன் யாத்திரை செய்யும் பொழுது எப்பொழு

தாவது எனக்குக் கஷ்டம் நேரிடின் அவரை உதவி கோருவேன். அவரும் தட்டாமல் உதவி செய்துள்ளார். செய்து கொண்டும் வருகிறார். இவர் பெயர் திரு. P. R. கோபால கிருஷ்ண ஐயர் (Retired Asst. Commissioner of Salt and customes.)

A.V.M. புரொடக்ஷன் அதிபர், A. V. மெய்யப்பசெட்டியார் என் வாழ்க்கையைப் படித்த பின் கூப்பிட்டுக் கொஞ்சம் பொருள் உதவி செய்தார். தக்க சமயத்தில் உதவிய அவருக்கும் என் நன்றி.

திரு. நா. துரைக்கண் அவர்களின் அறிமுகக் கடிதத்தினால் நகைச்சுவை அரசு N.S. கிருஷ்ணன் அவர்களைப் பார்க்கும் சந்தர்தபம் கிடைத்தது. அவர் என் யாத்திரையில் அதிக ஆர்வம் காட்டி அவரை நான் பார்த்ததற்கு அடையாளமாக என்டனுனிருந்து படம் பிடிக்க சம்மதித்தார். அன்றி பொருள் உதவியும் செய்தார் அவருக்கும் என் நன்றி.

மிகவும் கஷ்டமான நிலையில் இருந்த போது ஜெமினி ஸ்டுடியோ (Gemini Studio) அதிபர், ஸ்ரீ S. S. வாஸன் அவர்கள் செய்த உதவியையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அத்துடன் Mr. D. D. சத்தியதாஸ், தலைமை ஆசிரியர், போர்ட் ஹைஸ்கூல், திருக்கோவிலூர், திரு. P. R. சுவாமிநாதன், தலைமை ஆசிரியர், திரு. S. பால சுப்பிரமணியம், Secretary, Teachers guild Tanjore Dist. திரு. A. ஹருகிருஷ்ண நாயினுர், மாயவரம்; திரு, V. சேஷாத்ரி B. A. ஆசிரியர் (Srinivasarao High School Trivadi) திரு முத்துசாமி, நிருபர் குளோப் நியூஸ் ஏஜென்ஸி அவர்களுக்கும்' எனக்கு உதவிய Y. M. C. A. ராயப்பேட்டை கிளை, சித்த வைத்தியச் சங்கம் (சென்னை) திருவள்ளுவர் இளைஞர் கழகம், முத்தியாலுப் பேட்டை (சென்னை) Teachers Association girls Centre, Mandavalli, மாதர் நல இலாக்கா தஞ்சாவூர், ராபின்சன் இன்ஸ்டியூட், தென்னிந்திய ரயில்வே, நாகப்பட்டணம் முதலிய சங்களுக்கும் எனது தாழ்மை

யார்ன நன்றி. தமிழ் நாட்டில் என்னை மாணவ, மாணவிகளும் ஆசிரியை, ஆசிரியர்களும் ஆதரித்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களை நான்கு பிரிவாக பிரிக்கலாம்.

(a) பொருளுதவி செய்தவர்களும், புஸ்தகம் வாங்கியவர்களும் (b) புஸ்தகம் மட்டும் வாங்கியவர்கள், (c) பொருளுதவி மட்டும் செய்தவர்கள், (d) படம் வாங்கியவர்கள், கீழ்க் காணும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும், எனக்கு உதவி புரிந்த யாவருக்கும், என் தாழ்மையான நன்றி.

—டி. கே. ரா.

## Tirunelveli District

(c) Tiruarul High School, Kulasekarapatnam
,, Thayamma Training School ,,
,, St. Josephs High School, Manapad
,, Board High School, Tiruchendur
,, Govt. Training School, Tirunelveli
,, Sarah Tueker Secondary School for girls, Palamcottah
,, St. John's High School, ,,

## Madras District

(c) Lady Wellington Training College, T. Cane
,, Methodist Mission girls High School, Royapattah
,, Wesley High School. ,,
,, Children's Garden Middle School, Mylapore
,, San Thom High School ,,
(a) St. Antony's girls School ,,
,, Besant Theosophical High School, Adyar
,, Egmore High School, Egmore

,, Sir. M. Ct. M. High School, Purasawalkam
(c) St. Gabriel High School, G. T. Madras
,, Kellett High School, T. Cane
,, Chintadripet High School, Chintadripet
,, Chintadripet Girls High School ,,
,, Sri. Sarada Ely. School Mambalam
(b) T. T. V. High School, Mint Street
(b) E. L. M. Fabricious High School, Purasawalkam
,, C. S. I. Ely School, Thana St, ,,
,, C. S. I. Ely School Sundaram Pillai St, ,,
,, Lody M. Ct, Muthiah Chettiar Girl's High School, Purasawalkam
,, C. S. M. Girl's High School, Rayapuram.
,, St. Peters High School, ,,
,, St. Ebbas Girl's High School, Mylapore,
,, Bentick Girl's High School, Vepery,
,, Ramakrishna Boy's High School, (North] T. Nagar.
,, Ramakrishna High School, [South) T. Nagar.
,, Ramakrishna High School, T. Nagar.
,, T. Nager High School, ,,
,, Sri Sarada Training School, ,,
,, Corporation Boy's High School, Nugambakam,
,, C. S. M. Preparatory School, Kilpuk,
,, Andreson day Girl's High School, G. T.
,, Presidency High School, for Girl's Egmore.
,, R. B. C. C. C. High School, Perambur,

## South Arcot District

(b) Municipal High School, Cuddalore. N. T.
,, Municipal High School, Villupuram
,, Govt. Training School for men ,,
,, Board High School, Panruti

(a) Board High School, Porto Novo
,, Board High School, Tirukkoyilur
,, Board High School, Virudhachalam
,, Board High School, Valavanur
,, Board High School, Pennedam
,, S. P G. High School, Cuddalore, O. T.
(b) A. A. M. High School, Tindivanam
,, R. C. Town High School, Chidambaram
(a) R. C. Town School, Branch, Annamalinager
(b) Arumugha Navalar Middle School, Chidambaram
,, Govt, Nandanar High School ,,
(a) Govt. Nandanar Elementary School for girls ,,

## Chingleput District

(b) St. Columba's High School Chinglepet
,, Govt. Training Sehool ,,
(a) St. Joseph's High School ,,
,, Ramakrishna Mission High School ,,
(b) Ramakrishna Mission girls High School ,,
,, Ramakrishna Mission High School, Athur
,, Hindu High School, Madurantakam
,, Anderson High School, Kancheepuram
,, Board High School, Thirumuzhi
,, Board High School, Tirukklikundram
(a) Board High School, Sriperumbudur
(b) Board High School, Poonamallee
,, Board High School, Walajabad
,, Goudie M. M. High School Tiruvallur
(d) R. B. C. C. C. High School, ,,
(c) Dasars' Secondary School, Tinnanore
(a) Singaram Pillai Secondery School, Villivakkam
(b) Board High School, Ponneri
(b) Board High School, Karunguli.

,, Board High School, Uthiramerur.
,, Board H. Ely, School, ,,
,, Board High School, Peranugar ,,
,, M. M. Sec, School, Alandur,
,, Cordey High School, Tambaram.
,, Govt. Girll High School, Kaneheepurum.
,, D. R. Sec. Sehool, Big. Kaneheepurum.
,, Pachayappas Branch, Sec. School, ,,

## Tanjore District

(b) Municipal High School, Mayuram
(a) National High School. ,,
(b) L. M. C. High School, Shiyali
(a) S. M. H. High School. ,,
,, St. Petter's High Schcol, Tanjore.
(c) St. Peter's Middile School (Branch) East Gate
(a) St. Peter's Middile School (Branch) Manamachavadi
(b) Viraragava High School, Tanjore
(a) National High School, Nagapattinam
(c) National High School Nagore
(a) Board High School, Ammapet
(b) Board High School, Ayyampet
,, Board High School, Koothanallur
,, Board High School, Kuttalam
,, Board High School, Orathanad
,, Board High School, Pabanasam
,, Board High School, Pattukottai
,, Board girl's High School ,,
,, Board H. E. School, Kandian St. Pattukotiai
,, Board High School, Tiruturaipundi
,, Board High School, Tiruvarur
,, Board High School. Arantangi

„ Board High School, Vedaranyam
„ Board High School, Koradacheri
(b) Boar d High School, Vadllam
„ Board High School, Nannilam
„ Findlay High School, Mannargudi
„ National High School, „
(a) Board High School, Muthupet
„ St. Joseph's girl's Secondary School, Mannargudi
(b) Adhinam High School, Tiruvadamarudur
„ Kader Mohideen High School, Adirampatnam
„ Nadar's High School, Porayar
(a) Srinivasa Rao High School, Tiruvadi

## North Arcot District

(b) Munieipal High School. Tiruppattur
„ Municipal High School, Tiruvannamalai
(a) Municipal girl's High School „
(b) Municipal High School, Vellore
„ S. M. D. H. High School „
„ Don Bosco High School „
„ R. C. M. Girl's School, „
„ Govt. Secondary and Training School for women'
„ Board High School, Katpadi Vellore
„ Hindu High School, Arkonam
„ C. S. M. High School „
„ Conordia High School, Ambur
„ Hindu High School, „
„ Islamia High School, Vaniyambadi
„ Hindu High School „
(b) Municipal High School, Walajah
;, Board High School, Arcot
„ Board High School, Arni
„ Town High School, „

,, Board High School, Ranipet .
:. Municipal High School, Gudiyatham
,, Nellorepet Municipal High School, ,,
(a) Govt. Secondary & Training School for women
(a) Board High School, Kalavi.
,, Board High School, Cheyyar.
,, Board High School, Polur.
(b) Board High School, Wandiwash,
(a) Board High School, Desur,
(b) A. P. M. High School, Sholinghor,
,, Board H. Ely. School, Cheyyoar,

## Salem District

(b) Salem College Salem
,, Govt. Girl's High School, ,,
,, St. Marry's High School, ,,
,, London Missioh High School ,,
,, Little flower High School, ,,
,, Municipal High School, ,,
,, Shevapet Middle School, ,,
(a) Gugai Middle School, ,,
,, Board High School, Dharmapuri
(b) Govt. Secondary girl's School, ,,
(a) Board Ele. School ,,
,, Board High School, Namakkal
,, Board High School, Rasipuram
,, Municipal High School ,,
,, Board High School Attur

## Coimbatore District

(b) Stane's English High School, Coimbatore
(d) City Municipal High School. Coimbatore
,, R. S. Puram Municipal High School ,,

,, Oppanakara Street Municipal Middle School,,
,, Govt, Secondary & Training School for women Coimbatore
,, Mathar Kalvi Nilayam Seconbary School ,,
,, St. Mary's Secondory School, ,,
,, St. Michael's High School, ,,
,, Suburban High School ,,
,, Davanga Secondary School ,,
(d) Rao Sahib Maranna gownder girl's Higher Elementary Schoo' ,,
(b) K. Subramania Chetti High School, Tiruppnr
,, Nanjappa High School, ,,
,, Srimathi Jaivabai Davji High School, ,,
,, Palaniammal High School ,,
,, Mahajana High Schnol, Erode
,, Sengunthar High School ,,
,, Govt. Secondary & Training School for women, Erode
(a) Municipal High School ,,
(b) Municipal High School, North Coimbatore
,, Ramanathapuram Municipal High School ,,
,, Big Bazar Street Municipal Middle School ,,
,, Municipal High School, Pollachi
,, Samalkur Rama Iyengar Municigal High School Pollachi
,, Municipal girl's High School ,,
,, Board High School Udumalpet
,, Municipal Middle School, ,,
,, Sri Visalakhi girl's High School, ,,
(d) Sri Visalakshi College for Women, ,,
(b) Diamond Jubilee HighSchool, Gobichettipalayam
,, Diamond Jubilee girl's High School ,,

,, Board High School, Perunduri
,, Board High School, Bhvaani
,, Board High School, Andiyur
,, Board High School, Avinashi
,, Mahajana High School, Mettupalayam
,, C. S. I. Middle & Traning School, Dharapuram
,, Board High School, ,,
,, St. Aloysius girl's High School, ,,

## The Nilagiri District

(b) St. George Home (English School) Keti
,, M. M. High School, ,,
,, Municipal High School, Coonoor
,, Sri Shanti Vijaya Hindu girl's High School,
,, Sri Shanti Vijaya Hindu girl's High School Ootacamund
,, St. Joseph's High School, ,,
,, Municipal High School, ,,
(b) Board High School, Kotagiri
,, Board High School, Hoabathalai
,, Board High School, Nanjanad

## Tiruchirappalli District

(b) Holy Cross College High School Tiruchirappalli
,, Methodist girl's High School, Woriyur ,,
,, Savthri-Vidyasala Hindu girl's High School
,, Bishop Heber High School, Puthur ,,
,, Bishop Heber High School, Teppakulam ,,
,, National College School, ,,
,, Urumu Dhanalakshmy Vidyalayam, High School Tiruchirapyalli
,, Sesha Iyeugar Memorial High School woriyur
,, Board High School Lalgudi
,, Lalgudi Girl's High School ,,

(b) Board High School Ambil
,, Srirangam High School Srirangam
(a) Srirangam girl's High School ,,
(b) Municipal High School Karur
,, Municipal Pasupatheswarar Hfgh School ,,
,, Govt. Secoudary & Training School for women, Karur
(b) Board High School, Ariyalure,
,, Board High School, Senduri,
,, Board High School, Perambalur,
,, Board High School, Jayakondam,
,, Board High School Udiyarpalayam,
,, Board High School, Labbaikudikadu,
,, Board High School, Kulitli
,, Board High School, for girls ,,
,, Board High School, Musiri
,, Board High School, Manachanallur
,, Dalmia High School, Dalmiapuram,
,, Sri Vivekananda Vidyavanam High School Tirupalatturi
(b) Ponniah High School Trichy
(a) Zamindar's High School Kattupputhor
(a) Zamicldar's High School Turaiyur
(b) Makkulathore Higs School Tiruvarambur

## Pudukkottai Division

(b) Maharajah's College, Pudukkotati
,, Sri Brahadambal Govt School ,,
,, Govt. Training School ,,
,, C. S. M High School ,,
,, Ranee's girl's High School, ,,
,, Kulapathi Baliah Secondary School ,,
,, Subbarama Iyer's Secondary School ,,

# Madurai District

(b) Municipal High School, Palani
,, Govt. High School for girls ,,
(b) Victoriah Memorial Board High School Periyakulam
,, Chinnalapatti High School. Chinnalapatti
(a) St. Joseph's Girls High School, Dindigul
(b) Municipal, Middle School, ,,
(b) Govt. Training School for men ,,
(a) Govt. Training School for women ,,
(b) U. C. High School Madurai
,, American College High School, ,,
,, Sourashtra High School ,,
,, Annkullimantapam, Middle School ,,
,, Municipal, Middle School, Shenoynager ,,
,, Sourasyra Middle School,
,, Capron Hall Middle School
& Training School for Girls
,, St. Mary's High School, ,,
M. C. High School, ,,
(a) L. W. A. High School, ,,
(b) O. C. P. M. Girl's High School, ,,
,, St. Joseph's Girls High School, ,,
,, Govt. High School for Girl's ,,
(a) Municipal High School for Girl's ,,
(b) Municipal Middle School, ,,
(b) D. M. R. North gate Middle School for Girl's ,,
(b) Sir Meenachi Vidyasala High Ely School ,,
,, Nadar, Vidyasala, H. Ely School, ,,
,, Board High School, Uttamapalayam,
,, Board High School, Sholavandan.

(a) Board High School, for Girl's Melur,
(b) Board High School. ,,
(a) Board High School, for Girl's, Thirumangalam
(a) P. K. N. High School, ,,
(b) Board High School, Usilampatti
(b) C. S. M. Girl's High School, ,,
(b) C. S. M. Ely. School for Boys ,,
(a) Union High School, Cumbam
(b) N. S. High Sehool, Theni

## Malabar South District

,, B. E. M. High School, ,,
,, Board Mogan girl's High School
(b) Pandit Motilal High School, Palghat

## Ramanathapuram District

(a) Kshatiriya Girl's High School, Virudunagar,
(b) T. P. N. M. High School ,,
(b) Devangar High School, Aruppukottai
(b) O. V. C. High School, Manamadurai
(b) C. S. I. H. Ely. School, ,,
(b) Board High School, Tiruppathur,
(b) Board High Scoool for Girls Sivaganga,
(b) Raja High School, ,,

CONNEMARA PUBLIC LIBRARY
13 JUL 1957
MADRAS

In quest, ever in quest, of what? of the creator' Yes, see the creator through His creations. Oceans, Mountains, Streams, Cascades. Rivers, Valleys, Forests, Glen and Villages, Temples and mighty buildings and, different races of men and their customs and manners and way of living are all but different attributes of Him who created them. He speaks through His creations and let us hear like a good traveller. and not live like the frog in the well.

March on traveller! Let the companion be Courage. See, Wonder and Worship.

(Sd) **Mrs. P. Sivaram**

"All travel has its advantages. Read nature;

Nature is friend to truth, nature is Christian, preaches to mankind and bids dead matter aid us in our creed. There is a Signature of wisdom and power impressed on the works of God. Natural objects themselves, even when they make no claim to beauty, excite the feelings and occupy the imagination. Nature pleases, attracts, deligits, merely because it is nature. We recognise ia it an infinite power."

"In Contemplation of created things, by steps we may ascend to God."

"The bee, though it finds every rose has a thorn comes back lcaded with honey from his nambles and who should not other tourists do the same."

(Sd) Mrs. E. M. Williams.

CONNEMARA PUBLIC LIBRARY
13 JUL 1957
MADRAS

# இதனுள்

| அத்தி. | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | எனது இளமைப் பருவம் ... | 25 |
| 2. | வீட்டை விட்டு ஓடிப் போகுதல் .... | 26 |
| 3. | தேச சேவையில் ஈடுபடுதல் .... | 30 |
| 4. | என் சுற்றுப் பிரயாணம் ஆரம்பம் ... | 33 |
| 5. | இலங்கையில் சுற்றுப் பிரயாணம் .... | 34 |
| 6. | யாலாக் காட்டை அடைதல் ... | 38 |
| 7. | யாலாக் காட்டை தாண்டுதல் .... | 42 |
| 8. | கடலுக்குச் சாமான் பரி கொடுத்தல் ... | 49 |
| 9. | ஜனங்கள் உதவி செய்தல் ... | 52 |
| 10. | வடநாடு போகுதல் ... | 56 |
| 11. | பேய் தானு? ... | 57 |
| 12. | திபேத் போகுதல் ... | 61 |
| 13. | மார்பில் பாம்பு.......! .... | 66 |
| 14. | பர்மாவில் என் யாத்திரை .... | 68 |
| 15. | கரடியுடன் போர் .... | 70 |
| | பின்னுரை ... | 84 |



பெகுவில் உள்ள புத்தர் சிலை

76-ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.



மாந்தலே அரண்மனையின் ஒரு பகுதி

75-ஆம் பக்கம் பார்க்கவும்

# அத்தியாயம் 1.

3 JUL 1957

## எனது இளமைப் பருவம்

1912-ம் வருஷம் டிசம்பர் மாதம், 9-ம் தேதி சென்னை மாகாணத்தைச் சேர்ந்த கும்பகோணம் என்னும் ஊரில் பிறந்தேன். என் தகப்பனாருக்கு சமீபத்தில் உள்ள கிக்கல் என்னும் ஊர். என் தாயாருக்கு, கும்பகோணமே. என் தகப்பனார் சமீபத்தில் உள்ள உப்பளத்தில் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்ததாய் என் தாய் எனக்கு அறிவித்தார்கள். நான் பிறந்த சில மாதங்களுக்கெல்லாம் என் தகப்பனார் இறந்து விட்டார், நான் மிகவும் பணக்கார குடும்பத்தில் பிறக்கவில்லையானாலும் என் தாய் மிகவும் கியாதி பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்கள். என் தந்தையின் மரணத்திற்குப் பின் என்னை வளர்க்கும் பொறுப்பு என் தாய்மேல் விழுந்தது. 2, 3, வயது வரை எங்கள் சுற்றத்தார்கள் வீட்டில் இருந்தோம்.

நான் பிறந்த துர்அதிர்ஷ்டத்தால் தான் என் தந்தை இறந்தார் என்று என்னை எங்கள் சுற்றத்தார்கள் நிந்திக்க ஆரம்பித்தார்கள். அது என் அருமைத் தாயாருக்கு இஷ்டமில்லை; அன்றி இல்வசமாய் யார் இவ்வுலகில் இரண்டு ஜீவன்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுப்பார்கள். ஆகையால் என் தாய் சுற்றத்தார் வீட்டில் இருக்க இஷ்டப் படாமல் என்னை அழைத்துக் கொண்டு திருச்சியில் உள்ள என் மாமா, (தாயின் சகோதரர்) வீட்டுக்குப் போய் விட்டார்கள். அங்கும் அந்தப் பல்லவி தான். என் மாமி, என் தாயையும் என்னையும் அடிக்கடி நிந்திக்க ஆரம்பித்தார்கள்.

அங்கு அந்தக் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து சில ஆங்கிலேயர்கள் வந்து பள்ளிக்கூடங்கள் நடத்திக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் திக்கற்றவர்களையும், விதவைகளையும் அன்புடன் ஆதரித்து, அவர்களை முன்னுக்குக் கொண்டு வந்தனர். அப்பேர்ப்பட்டவர்களின் கண்ணில் என் தாயும் நானும் படவே எங்களையும் ஆதரித்தனர். என் படிப்பிற்கு வேண்டிய உதவி செய்ய எண்ணங் கொண்டு பூனாவில் இருந்த பண்டித ரமாபாய் ஹோமுக்கு அனுப்பினார்கள்.

நான் சிறுவனாயிருக்கும் போதே மிகவும் துடுக்குக் குணமுடையவனாய் இருந்தேன். இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஒருமுறை என் தாய் ஒரு பூப்போட்ட புடவையைத் துவைத்து

வெய்யிலில் காய வைத்திருந்தார்கள். நான் கத்தரிக்கோலால் என் கைக்கு எட்டியவரைப் பூக்களை வெட்டி விட்டேன். அதற்காக நன்ருய் அடியும் பட்டேன். மற்றொரு முறை வீட்டில் இருந்த டைம் பீஸ் (Time Piece)ஐ எடுத்து உடைத்து அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்க்க முயற்சித்த போதும் நன்ருய் அடிபட்டேன். எனக்கு சுமார் 6 வயது இருக்கும். அப்போது என் தாய் என்னை அழைத்துக் கொண்டு சென்னை வந்தார்கள். சென்னையில் என்னை ஒரு (Boarding) போர்டிங்கில் விட்டு விட்டு அவர்கள் மருத்துவ வேலை படிப்பதற்காக ஓர் ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார்கள். சில வருஷங்களுக்குப் பின் என்தாய் என்னை பராமரிக்க எண்ணி வேலை தேடும் வேலையில் இறங்கி விட்டார்கள். அதிர்ஷ்ட வசமாய் ஒரு ஊரில் வேலை கிடைத்தது. அங்கு என்னையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

அங்குள்ள பள்ளிக்கூடத்திற்கு என்னை படிக்க அனுப்பினுர்கள். சிறுவனுய் இருந்தும் எனக்குப் படிப்பில் மூளை செல்லவில்லை அதற்குப் பதில் விளையாட்டில் அதிகம் சென்றது. இதைக் கண்டு என் தாய் மிகவும் வருந்தினுர்கள். இப்படியாக 14-ம் வருடத்தையும் ஒருவாறு கழித்தேன்.

## அத்தியாயம். 2

## வீட்டை விட்டு ஓடிப்போகுதல்

14-வது வயதில் எனக்கு ஓர் கதைப் புத்தகம் கிடைத்தது. அதன் பெயர் (Robinson Crusoe) ராபின்சன் குருசோ. அதைப் படித்தபின் நான் எங்கேயாவது போய் ஓர் புதுத் தீவில் குடியிருக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் அதி வேகமாக வளர்ந்து கொண்டு வந்தது. ஒரு நாள் என்தாய் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து எனக்கு வேண்டிய சில துணி மணிகளையும் செலவுக்கு ஒரு ரூபாயும் எடுத்துக் கொண்டு ஓடி விட்டேன். என் தாய் என்னைக் காணுததால் உடனே சமீபத்தில் உள்ள எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களிலும் ரிப்போர்ட் செய்து விட்டுத் தானும் தேட ஆரம்பித்தார்கள். மறுநாளே என்னைப் போலீஸார் பிடித்து என் தாயிடம் ஒப்படைத்தார்கள். என்ன பிரயோஜனம்? அடிக்கடி ஓடுவது நிற்கவில்லை.

1949-ம் வருடம் நான் நாகப்பட்டணம் என்னும் துறைமுகத்திற்கு ஓடி விட்டேன். அங்கு ஓர் கப்பல் மாலுமியைக் கண்டு

(ஸ்ரீராவிக் கப்பல் அல்ல, பாய்மரக் கப்பல்) எனக்குத் தாய் தகப்பன் கிடையாது. ஆகையால் ஏதாவது ஓர் வேலை கொடுக்க வேண்டும், என்று மிகவும் பணிவாய்க் கேட்டேன். முதலில் அவர் மறுத்தார். ஆனால் பிற்பாடு என்மேல் இரக்கங் கொண்டு சமையல் செய்பவனுக்கு உதவியாளனாக என்னை அமர்த்தினார். சம்பளம் கிடையாது. வெறும் சாப்பாடு தான். அந்தக் கப்பலில் நான் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. தேங்காய் அளவு இரண்டு உருண்டை மிளகாயும், மல்லியும் அரைக்க வேண்டும். அதை அரைத்தவுடன் தேங்காய் திருகவேண்டும். சமையல் பாத்திரங்களை எல்லாம்தேய்த்துக் கழுவ வேண்டும். முன்பின் கஷ்டப்பட்டு வேலை செய்திராததால், மிகக் கஷ்டமாக இருந்தது.

அவர்கள் ஆகாரம் எனக்குப் பிடிக்கவில்லை. எல்லாம் தேங்காய் எண்ணெயில் சமைத்தவை. அதில் வேலை செய்பவர்கள் அனைவருக்கும் வழங்கும் தேத் தண்ணீர் மிக விநோதமானது. அதில் பாலும், சர்க்கரையும் இருக்காது. இடது கையில் ஒரு துண்டு வெல்லம் வைத்துக் கொண்டு, ஒரு வாய்த் தேத்தண்ணீர் குடிப்பது, கொஞ்சம் வெல்லத்தைக் கடித்துக்கொள்வது வழக்கம். வீட்டில் அதிகப் பாலும் சர்க்கரையும் சேர்த்து நாசுக்காய் குடித்த எனக்கு ஒரு வாய்கூட குடிக்க முடியவில்லை. ஒருவாறு எங்கள் கப்பல் பருத்தித்துறை என்னும் ஊரை அடைந்தது. கரை சேர்ந்த சில தினங்களில், மாலுமிக்குத் தெரியாமல் அங்கிருந்து ஓடி விட்டேன். வண்டியில் போவதற்குப் பணம் இல்லாததால் நடந்தே பல கிராமங்கள் வழியாகச் சென்றேன். மூன்று நாள் தொடர்ச்சியாக நடந்தேன். பசியோ சொல்ல முடியாது. யாரிடமாவது கேட்கலாம் என்றாலோ வெட்கம். பச்சைத் தண்ணீர் குடிப்பதும், சாலையின் ஓரத்தில் உள்ள புளிய மரத்தின் இலைகளைத் தின்று என் வயிற்றை நிரப்பினேன். புதுத் தீவிற்கு வந்து விட்டோம். இனி மனிதன் இல்லாத தீவைக் கண்டு பிடிக்க வேண்டும் என்னும் ஆர்வம் இருந்ததினால், பசியையும் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் நடந்து, மதவாச்சி என்னும் இடம் வந்தேன். அங்கு அநேக கூலிக்காரர்கள் ரயில் வண்டியிலிருந்து மணலைத் தூக்கிக்கொண்டு போய் மாட்டு வண்டிகளில் கொட்டிக் கொண்டு இருந்தார்கள். அவர்களை நான் ஐயா, அதிக பசியாக இருக்கிறது, நானும் உங்களோடு வேலை செய்கிறேன் எனக்குக் கொஞ்சம் ஆகாரம் கொடுங்கள் என்று கேட்டேன். யாரும் பதில் சொல்லாமல் தங்கள் காரியங்களை கவனித்துக்

கொண்டு இருந்தார்கள். ஒருவேளை அவர்கள் கூலிக்குநானும் பங்குக்கு வந்து விட்டேன் என்ற பொருமையோ, என்னவோ !

எதிரில் ஓர் தேத் தண்ணீர் கடை தெரிந்தது. அங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடிக்க எண்ணி, அங்கு சென்றேன். அக்கடையில் இருந்த ஒருவர் என்னை எந்த ஊர் என்று கேட்டார். அவருக்கு என் விருத்தாந்தத்தைச் சொன்னேன். கருணை உள்ளம் படைத்த அவர் ஒரு ரொட்டியும், வாழைப்பழமும், டீயும் வாங்கிக் கொடுத்தார். என் பசிக்களையும் தீர்ந்தது. இரவு ஆகாரமும் கொடுத்தார். அங்கு வேலை செய்பவர்களுக்கு மேஸ்திரி என்றும், நான் வேலை செய்ய விரும்பினால் வேலைக்கு வைத்துக்கொள்வதாயும் பகலில் வேலை செய்தால் (12 அணு) கூலியும் இரவில் வேலை செய்தால் 125 சதம் (1-4-0) கூலியும் கிடைக்கும் என்று கூறினார்.

வேலை செய்து கொஞ்சம்பணம் சேர்த்தபின் வேறுஇடம்போக எண்ணி இரவில் வேலைசெய்ய ஒப்புக்கொண்டேன். மறுநாள் வேலைக்குப் போனேன். கூடையில் மணலை நிரப்பி இரண்டுபேர் தூக்கி என்தலையில் தொப்பென்று வைப்பார்கள். தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு போய் மாட்டு வண்டியில் கொட்டுவேன். கழுத்தெல்லாம் ஒரேவலி, தாயாருக்கு ஒரேபிள்ளை, அருமையாக வளர்க்கப்பட்ட நான், கஷ்டம் என்பது என்ன என்று அறியாத நான், வீட்டை விட்டு வந்ததையும், கஷ்டப்படுவதையும் எண்ணி வருந்துவேன். திரும்ப வீட்டுக்குப்போக நினைப்பதுண்டு. ஆனால் "புது தீவைக்கண்டுபிடித்து ராபின்சன் குருசோ வாழ்ந்ததைப்போல் வாழ நினைத்ததினால்" கஷ்டத்தை சகித்துக்கொண்டு வேலைசெய்தேன். முடியவில்லை. மேஸ்திரியிடம் என்நிலையைக் கூறி, எனக்குச் சேரவேண்டியபணத்தைக் கொடுத்தால்வேறுஎங்கேயாவதுபோகமுடியும் என்று சொன்னேன்.

அவர் எனக்கு வேண்டிய பணத்தையும், கொழும்புக்கு ஒரு டிக்கட்டும் வாங்கிக் கொடுத்து, ஒரு கடிதமும் கொடுத்து உன்னால் இப்படிப்பட்ட கஷ்டமான வேலை செய்யமுடியாது, கொழும்பில் என் நண்பர் இருக்கிறார்; அவர் உனக்கு உதவி செய்வார் என்று கூறினார். அன்று இரவே புறப்பட்டு மறுநாள் காலை கொழும்பு சென்றேன்.

கடிதத்தின் விலாசத்தின்படிபோய் அவரிடம் கடிதம் கொடுத்தேன். அவரிடம் உள்ளது உள்ளபடி நான் ஓடி வந்ததையும்

கூறினேன். அவர் ஓர் கடையில் வேலைக்கு அமர்த்தினர். சாப்பாடு போட்டு எல்லாச் செலவும் போக மாதம் 15 ரூபாய் சம்பளம். 4மாதம் வேலை செய்தேன்.

"என் தாயைப் பிரிந்த வருத்தம் மனதில் உதித்தது. அந்த ஏக்கத்தால் வேலை செய்ய முடியவில்லை. உடனே என் சம்பளத்தை வாங்கிக் கொண்டு என் முதலாளியிடம் விடைபெற்று இந்தியா வந்துசேர்ந்தேன். இங்கு என் தாய் இருந்த இடத்திற்குப் போனல் அந்த வீட்டில் வேறு யாரோ இருந்தார்கள். இவர்களிடம் என் தாயாரைப் பற்றி விசாரித்ததற்கு 2 மாதமாக மிகவும் நோய்வாய்ப் பட்டிருந்ததால் சென்னையிலுள்ள ஓர் ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டதாய்ச் சொன்னர்கள். அவர்கள் கொடுத்த விலாசத்தை எடுத்துக்கொண்டு சென்னையை அடைந்தேன். அங்கு என் தாயைக் காணவில்லை.

என்னை அறியாமல் கண்களில் நீர் தாரை தாரையாய் வழிந்தது. எனக்கு தெரிந்த ஒருவர் வீட்டிற்குப் போய் என் தாயைப்பற்றி விசாரித்தேன். அவர்கள் என்மேல் அதிகப் பற்றுள்ளவர்கள். என்னைக் கண்டவுடன் அழ ஆரம்பித்தார்கள். அதைப் பார்த்து நானும் அழுதேன். நீண்ட நேரத்திற்குப் பின் என் தாய் என்னைக் காணாத கவலையால் அதிக வியாதியாக இருந்த தாயும் பின் அவர்கள் மதுரையில் ஓர் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டதாயும் கேள்விப் பட்டேன்.

"என் மன நிலையை எப்படி எழுதுவது என்பது எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது உலகத்தில் உள்ள அனுதைகளில் நானும் ஒருவன். என்னைப்பற்றிக் கவலைப் படுபவர்கள் யாரும் உலகில் கிடையாது........"

எனக்காகக் கவலைப் படுவதற்குக் கடவுளைத் தவிர வேறு யார் இருக்கிருர்கள்? ஒருநாள் தலைவலி என்று படுத்தால் யார் என்னை கவனிக்கப் போகிருர்கள். படுக்கபாயும்இல்லை, இருக்க இடமுமில்லை எல்லாவற்றையும் நினைத்து அழுதேன். என்னைதேற்றுவார் யாரும் கிடையாது. பைத்தியக் காரனைப்போல் எங்குபோகிறேன், ஏன் போகிறேன் என்று தெரியாது. மாலுமியற்ற கப்பலைப்போல் உலகம் என்னும் கடலில் போகும்திசை தெரியாது தத்தளித்தேன். கையில் இருந்த சொற்ப காசும் ஆகிவிட்டது, சர்க்கஸ் கம்பெனிகளுடனும், பரதேசிகளுடனும் சுற்றித் திரிந்தேன். மனதில் நிம்மதிகிடையாது. ஒருநாள் கீழே கிடந்த ஓர்துண்டுக் கடிதத்தை எடுத்துப்படித்தேன்.

அதில் கீழ்கண்டவை அச்சிடப்பட்டிருந்தது. "கர்த்தர் என் மேய்ப் பராயிருக்கிறார், நான்தாழ்ச்சியடையேன், அவர்என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையிலே என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

ஆம்! திக்கற்ற எனக்கும், என்னைப்போல் உள்ளவர் களுக்கும் கடவுளைத் தவிர வேறுயார் இருக்கிறார்கள். இதைப் படித்தபின் என் மனம் மிகஆறுதல் அடைந்தது.

(நீங்கள் உங்கள் பெற்றோரை விட்டு ஓடிபோகாதீர்கள்)

## அத்தியாயம். 3

### தேச சேவையில் ஈடுபடுதல்

1931-ல் உலகம் போற்றும் காந்தி மகாத்மாவிற்கும் இந்திய வைஸ்ராய் லார்ட் இர்வினுக்கும் ஓர் ஒப்பந்தம் நடந்தது. அந்த சமயத்தில் காங்கிரஸ்தொண்டர்கள் சாத்வீகமாக அன்னியர் ஜவுளிக் கடைகளையும், மதுக்கடைகளையும் மறியல் செய்தனர். எனக்கும் யாரும் இடையாது. என்னைப்பற்றி யாருக்கும் அக்கரைகிடையாது. ஒருநாள் பசி மிகுதியால் ஒரு வீட்டில் ஆகாரம் கேட்டேன். அவர் கொடுத்த தோடல்லாமல் எனக்கு புத்தி மதியும் கூறி, தேசத்திற்கு பாடு படும்படிசொன்னார். ஆம்! நான் உலகில் இருந்து என்னபயன்? உலகத்திற்கு பாரம், சமுகத்திற்கு இடைஞ்சல், ஆகையால் அவர் சொல்படி தேச சேவையில் ஈடுபட்டேன்.

இப்படிச் சில நாள் கழிந்தது. என்னைப்பற்றி யார் கேட்டாலும் அவர்களுக்கு என் உண்மை பெயரும். ஊரும் அறிவிக்காமல் மனம் போனபடி சொல்லிக் கொண்டுபோனேன். 1932-ல் காந்தி மகாத்மா லண்டனிலிருந்து வந்தவுடன் அவரைக் கைது செய்தனர். இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்கமும் ஆரம்பித்தன. நான்சென்னையில் தேசிய வேலை செய்ய எண்ணி சென்னை வந்து சேர்ந்தேன். போலீசார் கண்ணில் மண்ணைப் போட்டு ரோடுகளில் நோட்டீஸ் ஒட்டுவது, தார் ரோட்டில் சில வார்த்தைகளை எழுதுவதுமாக இருந்தேன். சில நாளில்நானும் அன்னிய ஜவுளிகடைகளில் மறியல் செய்யப் போய் பலமுறை போலீஸாரிடம் தடியடி பட்டேன். எனக்குத் தேசப்பற்று அதிகரித்தது. நான் மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்தேன். சில நாள் கழித்து கைதுசெய்யப் பட்டேன். எந்த ஊர் என்று போலீஸார் கேட்டனர். நான் தூத்துக்குடி என்று




நான் தேச சேவையில் ஈடுபட்டு சிறை சென்றதற்கும் உபாத்திமை தொழில் புரிந்ததற்கும் மேலே உள்ள கடிதங்களே சாட்சி.

பொய் சொன்னேன். 15 நாட்கள் ரிமாண்டில் வைத்திருந்து பின் தூத்துக்குடிக்கு டிக்கட் கொடுத்து ரயில் ஏற்றி விட்டார்கள். வேறு வழியில்லாமல் தூத்துக்குடி போய்ச் சேர்ந்தேன்.

இந்த ஊர் எனக்கு புதியது. அங்கு சில காங்கிரஸ் காரர்களைப் பார்த்து நான் கோயம்பத்தூர் என்று சொன்னேன். இங்கும் பல முறை தண்டனை அடைந்தேன். 3 மாதம், 6 மாதம் கடுங்காவல்தான் எனக்குக் கிடைக்கும் பரிசு. தூத்துக்குடியில் இருந்து திருச்சிவரை சுமார் 200 மைல் தூரத்திற்குப் போலீசார்களுக்குப் பல முறை தொந்தரவுகள் கொடுத்திருக்கிறேன். ஒருமுறை திருச்சியில் உள்ள போலீஸ்காரனுக்கு என்னால் 15 நாள் சஸ்பெண்டும்(Black Mark) பிளாக் மார்க்கும் கிடைத்திருக்கிறது. மதுரையில் போலீசார் தொண்டர்களை நல்லமுறையில் நடத்தும்படி செய்தேன். சிறையில் இருக்கும்போது என் சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி பலமுறை பலரிடம் சொல்லி எனக்கு யோசனை சொல்லும்படி கூறியுள்ளேன்.

இதற்கு வேண்டிய சாமான்கள் வாங்க எவ்வளவு பிடிக்கும் என்பதாகவும் பிரயாணத்தில் ஏற்படும் செலவுக்கு என்ன செய்வது என்பது போல் பல எண்ணங்கள் உதித்தன. என் தண்டனைக்காலம் முடிந்த பின் என்னை விடுதலை செய்தார்கள், வெளியில் வந்தேன். என் நல்ல அதிஷ்டத்திற்கு தூத்துக்குடியில் ஹரிஜனங்களுக்கான ஒரு பள்ளிக்கூடத்தில் 9 ரூபாயில் ஒரு வேலை கிடைத்தது. அத்துடன் ஜீ. சிப்ரமணிய சுதேசி ஸ்டோரில் சாமான்களை எடுத்து விற்கும் வேலையும் கிடைத்தது.

சில காலம் இப்படிக் கழித்தேன். பல கஷ்டங்கள் எனக்கு நேர்ந்தன, கஷ்டம் தாங்க முடியாமல் தற்கொலை செய்ய எண்ணி ஒருமுறை எட்டு அவுன்ஸ் டின்ச்சர் ஐயோடின் (Tincher Iodine) என்னும் பாஷாணத்தைக் குடித்திருக்கிறேன். மறுமுறை ஒரு அவுன்ஸ் திமிரி (Phosphorus) என்னும் பாஷாணத்தைச் சாப்பிட்டுள்ளேன். இன்னொரு முறை ஓடும் பஸ்ஸிலிருந்து பக்கத்தில் உள்ள பள்ளத்தில் குதித்து விட்டேன். ஆயினும் நான் சாகாமல் உயிருடன் இருக்கிறேன். உலகத்தில் பெரிய காரியங்கள் செய்யவோ அல்லது எக்காரணத்திற்கோ என்னைக் கடவுள் ஜீவிக்க வைத்துள்ளார்.........

# அத்தியாயம். 4

## என் சுற்றுப்பிரயாணம் ஆரம்பம்

என் மனதில் சுற்றுப்பிரயாணம் ஆரம்பிக்க வேண்டும் என்னும் எண்ணம் நாளுக்கு நாள் அதிகவேகமாய் வளர்ந்ததினால் என் வேலையை விட்டு விட்டு 1935-ம் வருடம் பிப்ரவரி மாதம் 11-ம் தேதி மாலை 4 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து புரப்பட்டேன். எனக்கு வேண்டிய சாமான்கள் வாங்கியது போக மீதி $2\frac{1}{2}$ அணு தான் இருந்தது. அன்று இரவு முழுவதும் நடந்து காலை திருநெல் வேலி என்னும் ஊருக்கு வந்தேன். இது 43 மைல் தூரம் உள்ளது. அங்கு ஒரு நண்பர் வீட்டில் தங்கி மறுநாள் அங்கிருந்து திருவனந்த புரம் நோக்கி நடந்தேன். வழியில் பசித்த இடத்தில் யாரிடமாவது ஆகாரம் கேட்டு வாங்கி சாப்பிடுவது. ஆரம்பத்தில் போதிய உணவு கிடையாது. பலமுறை பட்டினியும் பசியுமாய் யாத்திரை செய்ய வேண்டி இருந்தது.

திருவிதாங்கூரிலிருந்து மேற்குக் கரையோரமாகப் போனேன். இங்கு அனைவரும் மலையாளிகள். என் தாய் பாஷைக் கும் அவர்கள் பாஷைக்கும் சொற்ப வித்தியாசம் தான். ஆனால் அன்புடன் என்னை ஆதரித்த மலையாளிகள் அநேகர் பசியின்றி யாத்திரை செய்ய உதவி புரிந்தனர். எப்படியோ பல கிராமங்கள், நகரங்கள் வழியாக மங்களூர் வரை வந்தேன்.

கிராமங்களில் பட்டினியாய் இருந்ததை விட நகரங்களில் தான் அதிகமாய் பட்டினி இருக்க நேர்ந்தது. மங்களூரில் பல இடங்களில் போய் என் நிலையைச் சொல்லி கொஞ்சம் ஆகாரம் கேட்டேன். ஆனால் யாரும் என்மேல் இரங்கவில்லை. இரண்டு நாள் பட்டினி, பச்சைத் தண்ணீரைத் தவிர வேறு ஆகாரம் கிடையாது. கையில் இருந்த வேலையை விட்டு விட்டு யாத்திரை செய்யப் புறப் பட்டதைப் பற்றி மிகவும் வருந்தினேன். ஆனாலும் எடுத்த காரி யத்தை நிறைவேற்ற வேண்டும் என்னும் எண்ணத்தால் இத் துன் பத்தையும் சகித்தேன். ஓர் கனவான் என் நிலையைக் கண்டு, ஒரு வாரம் அவர் வீட்டில் எனக்கு நல்ல உணவு கொடுத்தார். அதோ டில்லாமல், நான் மங்களூரை விட்டு புறப்படும் போது 10 ரூபாயும் கொடுத்து உதவினார். அவர் செய்த நன்றியை எந்நாளும் மறக்க முடியாது.

மங்களூரில் இருந்து கோவா, பம்பாய் முதலிய இடங்களுக்குப் போனேன். பம்பாயில் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமன்று. இங்கு

படுக்க இடமும் உண்ண உணவும் கிடைக்காமல் அதிகக் கஷ்டப் பட்டேன். பம்பாயில் கல்பாத்தி என்னும் இடத்தில் ஒரு வாரம் இருந்து பின் அஹமத்நகர், ஷோலாப்பூர் வந்து சேர்ந்தேன். என் பிரயாணத்திற்கு போதுமான ஆதரவு இல்லாததால் காயிதப்பூ செய்து விற்று அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு என் யாத்திரையை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்தினேன். வட நாட்டில் எனக்கு வடமொழி தெரியாததால் வேறு கஷ்டம். ஆகையால் தென்னாட்டை அடுத்துள்ள இலங்கையில் யாத்திரை செய்து விட்டு பின்னர் வட நாட்டில் யாத்திரை செய்ய திட்டமிட்டேன். அதன்படி பல நகரங்கள் வழியாக, மதுரை வந்தேன் நான் காங்கிரஸில் ஈடுபட்டு வேலை செய்த நாட்களில் மனம் கோணமல் பல முறை ஆதரித்தவரும், இருக்க இடமும், உண்ண உணவும், கொடுத்து உதவியவருமான கனம் (L. Krishnaswamy Bharathy, M. A., B. L) கிருஷ்ணசாமி பாரதியார் அவர்கள் வீட்டில் சில நாள் தங்கியிருந்தேன். அவர் எப்பொழுதாகிலும் என் பூர்வோத்திரத்தை அறிய முயற்சித்ததும் கிடையாது. நானும் சொன்னதும் கிடையாது. அவர் மனைவியும் என்னை ஒருநாளும் வருந்தும்படி செய்தது கிடையாது. அவர் ஓர் தீவிர காங்கிரஸ்வாதி. சிலநாள் அவர் வீட்டில் இருந்த பின் மறுபடியும் என் பிரயாணத்தை ஆரம்பித்து சிவகங்கை, ராமனாதபுரம், மண்டபம் வந்தேன். இந்தியாவில் இருந்து இலங்கை போகும் அனைவரும் இங்கு வந்து தான் போக வேண்டும். இதைப் பற்றியும், மற்ற சில விஷயங்களைபும் "நான் கண்ட இலங்கை" என்னும் புத்தகத்தில் விவரமாய் எழுதியுள்ளேன்.

## அத்தியாயம். 5

### இலங்கையில் சுற்றுப்பிரயாணம்

மண்டபத்திலிருந்து இலங்கையின் தலைநகரான கொழும்பு என்னும் ஊருக்கு வந்தேன். 1936-ம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ம் தேதி கொழும்பில் இருந்து புறப்பட்டேன். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் அதிக வித்தியாசம், நம் நாட்டைப் போல் சாப்பாடு ஆகிவிட்டாற் போலிருக்கே என்று கேளாமல், சாப்பிடு என்று சொல்லும் குணமும், மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற குணமும் அவர்களிடம் உண்டு. கொழும்பில் இருந்து பல நகரங்களின் வழியாக காலி, மாத்திரை, வழியாக வந்தேன். இப்பகுதியில்

என்னை ஜனங்கள் அன்பாய் ஆதரித்தனர். நல்ல பாதை கடற்கரையோரமாய்ப் போகிறது. இப்பகுதியில் உஷ்ணம் அதிகம். ஒருநாள் மாவெல்லைக்கும் ஹம்பந்தோட்டைக்கும் நடுவில் என்னிடம் உள்ள தண்ணீர் பையில் தண்ணீர் ஆகிவிட்டது. வழியில் சிறிய ஊரோ அல்லது கடையோ கிடையாது. தாகத்தால் நாக்கு வறண்டு விட்டது. என் கஷ்டமான நிலைமையை விவரிக்க முடியாத அவ்வளவு கஷ்டத்திற்குள்ளானேன். பக்கத்தில் கடல் தண்ணீரைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. ஒரு பக்கம் தண்ணீர் தாகம். மறு பக்கம் வெயிலின் கொடுமை. ஒன்றுக்கும் வழி இல்லாமல் ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்து விட்டேன்.

மேற்கொண்டு ஒரு அடியும் எடுத்து வைக்கமுடியாத நிலையில் இருந்தேன். இப்படி இருக்கும் நிலையில் ஒரு கார் சத்தம் கேட்டது. உடனே ரோட்டின் மத்தியில் ஓடி நின்று கொண்டு பார்த்தேன். கார் என்னை நோக்கி வருவதைக் கண்டு அதைநிற்கும்படி கையை காண்பித்தேன். அது என் சமீபத்தில் வந்து நின்றது. அதனுள் இருந்தவர்களிடம் என் நிலையைச் சொல்லி கொஞ்சம் தண்ணீர் கொடுக்கும்படி மிகத்தாழ்மையாகவேண்டிக்கொண்டேன். அவர்கள் தங்களிடம் தண்ணீர்கிடையாது என்றும், தங்களோடு மோட்டாரில் வந்தால் 10 மைல்தூரத்தில் உள்ளஹம்பந் தோட்டைக்குக்கொண்டு போய் விடுவதாயும் சொன்னார்கள். நான் காரில் பிரயாணம் செய்ய விரும்பவில்லை யென்றும் ரேடியேட்டரில் இருக்கும் கொஞ்சம் தண்ணீரை யாகிலும் கொடுக்கும்படி கேட்டேன். அவர்களும் அதன்படி கொடுத்தார்கள். அதைஆறவைத்துக் குடித்தேன். ஒரே இரும்பு நாற்றம், இருந்தாலும் அது எனக்குப் புத்துயிர் அளித்தது அன்று மாலை ஹம்பந் தோட்டைப் போய்ச் சேர்ந்தேன்.

- ஒவ்வொரு முக்கிய இடங்களுக்குப் போனால் அங்குள்ள அதிகாரிகளைக் கண்டு கையெழுத்து வாங்குவது உண்டு. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள அதிகாரிகளுக்கும் அங்குள்ள அதிகாரிகளுக்கும் அதிகவித்யாசம். நான் தமிழ்நாட்டில் பலமுறைமனமுடைந்துள்ளேன். அதிகாரிவீட்டில் இருக்கும்வேலைக்காரனோ பியூனோஅல்லது பொலீஸ்காரனோ அதிகாரி பார்க்கமுடியாது என்று சொல்லுமுன், அவன் அதிகாரியைப் பார்க்க முடியாது என்று சொல்லிவிடுவான்.

அப்படி மீறி அதிகாரியைப் பார்த்தாலும்எனக்குவேலைஅதிகம், இப்போது பேசமுடியாது, நாளை வா! என்று கூறி விடுகின்றனர். சிலர் என் அந்தஸ்தென்ன ? உன்னைத் தெரியாத போது எவ்விதம்

கையெழுத்துப் போடுவேன் என்று சொல்லுகின்றனர். இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னும் அதிகாரிகளின் மனம் மாறவில்லை.

இலங்கையில் இம்மாதிரி கஷ்டம் கிடையாது. ஏழை பிச்சைக் காரன் யாராக இருந்தாலும் சரி வெளியில்உள்ள வேலைக்காரனிடம் போய்ச் சொல்லுவான் அவர்வேலையாக இருந்தால் அவர் வேலையாக இருக்கிறார், வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லிங்கள், நான் போய்ச் சொல்லுகிறேன் என்பான். இதுதான் இந்தியாவுக்கும், இலங்கைக் கும் உள்ள அதிகாரிகளின் வித்தியாசம்.

நான்அவ்வதிகாரியின்வேலைக்காரனிடம் அதிகாரியைப் பார்க்க விரும்புவதாய்ச் சொன்னதற்கு அவன் உள்ளே போய்ச் சிலநிமிஷங் களில் வெளியில்வந்து என்னை உள்ளே அழைத்துப்போனான். நான் அவரைப் பார்த்து பிரமித்துப் போய் விட்டேன்! ஏன் ? நான் யாரிடம் தண்ணீர் கேட்டேனோ அவரேதான் அதிகாரி. சிரித்த முகத்துடன்அன்பாய் என்னிடம் பேசி என் புத்தகத்தில்கையெழுத் துப்போட்டதல்லாமல் அன்று அவர் வீட்டில் தங்கும்படிசொன்னார் இரவு சாப்பிடும்போது என் பிரயாணத்தைப் பற்றி அவரும் அவர் மனைவி, இரண்டு சிறு பையன்கள் விவரமாகக் கேட்டனர். மேற் கொண்டு எப்படிப் போகிறாய் என்றும் கேட்டார். நான் கடற்கரை யோரமாக முதலில் இலங்கையைச் சுற்றிவிட்டுப் பின் உள்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யப் போவதாய் என் பிளானைக்கட்டினேன். அதற்கு அவர் நீஅப்படிப் போகமுடியாது திசைக்குப் பக்கத்தில் ஒரு பெரியகாடு இருக்கிறது. அதில் யாரும் போகக்கூடாது. போன தும் கிடையாது என்று சொன்னார். நான் சிறுவயது முதல்காட்டில் வசிக்க ஆசைப்பட்டவன். இதுவரை காட்டில் சஞ்சரிக்க எனக்குப் போதுமான வசதி கிடைக்கவில்லை. காட்டின் இயற்கை வனப்பை யும் அதில்வாழும் மிருகங்களின் இயற்கையான குணாதிசயங்களையும் காண எனக்கு அதிக ஆவல். மிருகங்களால் எனக்கு எவ்விதமான ஆபத்து ஏற்பட்டாலும் அதைச் சந்தோஷமாக நான் சகிப்பேன். அதில்லாமல் அந்தக் காட்டைப் பற்றிய முழுவிவரத்தையும் உங்களுக் குஅறிவிப்பேன். குறுக்குப்பாதையைக் கண்டுபிடிப்பேன். இதுவரை யாரும் செய்யாத காரியத்தை செய்யத்தானே நான் இந்த யாத்திரை யை ஆரம்பித்தேன். தயவு செய்து என்மேல் இரக்கங்கொண்டு அந்தக் காட்டில்போக எனக்கு அனுமதி தாருங்கள். நீங்கள் மனம் வைத்தால் எனக்கு அனுமதி கிடைக்கும். இக்காரியத்தால் என் உயிர் போனாலும் நான் பின்வாங்கேன் என்று மிகவும் தாழ்மையாகக்

கேட்டுக் கொண்டேன். அவர் யோசித்துச் சொல்வதாய்க் கூறி விட்டார். கிட்டதட்ட ஒருவாரம் வரையில் அவர் வீட்டிலேயே




இலங்கையில் என் பிரயாணத்தின் மார்க்கம்.

தங்கினேன். ஒருநாள் டைப்படித்த சில பத்திரங்களை என்னிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கும் படிச் சொன்னார். நான் படித்துப் பார்த்தேன் முக்கியமாக அதில் மூன்று நிபந்தனைகள் இருந்தன.

(1) என் இஷ்டமாக மேற்படி காட்டைக்கடப்பதால் எனக்கு எவ்விதமான ஆபத்து ஏற்பட்டாலும், அதற்கு இலங்கை அரசாங்கமோ அல்லது அதற்கு உடந்தையாய் இருந்தவர்களோ யாரும் ஜவாப் தாரியல்ல.

(2) மேற்படி காட்டில் ஏதாவது நான் கண்டு எடுத்தால் அதற்கு அரசாங்கமே எல்லா விதத்திலும் பாத்தியமுடையவர்கள்.

(3) அக்காட்டில் எடுக்கும் எல்லாப் படங்களும் காட்டைக் கடந்தவுடன் கழுவுவதற்கு முன் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதுதான் முக்கியநிபந்தனை. இதற்கு நான் ஒப்புக் கொண்டேன். ஏன் என்றால் இதுவரை யாரும் செய்யாத காரியத்தை நான் செய்ய வேண்டும் என்ற எண்ணம். ஆனால் மிருகங்களைப் பற்றி நினைக்கும்போது என்னை யறியாமல் பயம் ஏற்படும். நான் பத்திரத்தைக் கையெழுத்திட்டு கொடுத்தவுடன் அவர் எனக்கு வழிக்கு வேண்டிய சில உணவுப் பொருள்களும் ஒரு கடிதமும் கொடுத்தார். அக்கடிதத்தை அந்தக் காட்டு எல்லையில் உள்ள காட்டிலாகா அதிகாரி (Forest Ranger) இடம் கொடுக்கும்படி கூறி என்னை ஆசி கூறி அனுப்பினார்.

மறு நாள் திஸ்ஸைமஹாராமா என்னும் ஊருக்கு வந்தேன். அங்கு ஒருவர் வீட்டில் தங்கினேன். அவரிடம் கேட்டதற்கு அந்தக் காட்டைப் பற்றி அவர் சொல்லும் போது எனக்கு பாதி உயிர் போய் விட்டது. இருப்பினும் முன் வைத்த காலைப் பின் வைப்பது ஆண் பிள்ளைகளுக்கு அழகா? இல்லை ! ஆகையால் அவரிடம் நான் எப்படியும் அக்காட்டைக் கடப்பேன் என்று கூறிவிட்டேன். திஸ்ஸையில் இருந்து அந்தக் காட்டிலாகா உத்தியோகஸ்தர் இருக்கும் இடத்திற்குச் சுமார் முப்பது மைல் இருக்கும். ஆகையால் அதிகாலையில் எழுந்து அவரிடம் விடை பெற்றுப் புறப்பட்டேன், அவர் எனக்குக் கொஞ்சம் காய்ந்த ரொட்டி வழிக்குக் கொடுத்தனுப்பினார்.

## அத்தியாயம். 6

### யாலாக்காட்டை அடைதல்

என் சாமான்களை எப்பொழுதும் போல் முதுகில் மாட்டிக் கொண்டு தன்னந் தனியாக நடந்து போனேன். ஐந்து மைல்

கடந்த பின்பு ஓர் ஒத்தடிப் பாதை அந்த ரோட்டில் இருந்துப் பிரிகின்றது. அதன் வழியாகப் போனேன். மத்தியானம் என்னிடம் இருந்த உணவைக் கூடச் சாப்பிடவில்லே. ஏனென்ருல் முதலிலேயே சாப்பிட்டால் பிற்பாடு வழிக்குப் போதாமல் போய் விட்டால் என்ன செய்வது ? இரண்டு பக்கமும் அடர்ந்த மரம் கொடிகள், சில இடங்களில் அடர்த்தியால் வெய்யிலில் கூட என்மேல் படவில்லே. அவ்வளவு அடர்த்தி, சில இடங்களில் வெறும் வெட்ட வெளி. அதில் வெகு தூரத்தில் காட்டு யானைகளும் காட்டு எருமைகளும் தனித்தனிக் கும்பலாக மேய்ந்து கொண்டிருந்தது. சிலஇடங்களில் மான், மறை முதலியன மேய்ந்து கொண்டிருந்தது. எங்கும் ஒரே சத்தம்! காட்டுத் கோழி கூவுவதும் மயில்கள் கத்தும் சத்தமும்! இருந்தாற் போல் யானை திடீர் திடீர் என்று பிளறும் போது நான் மிகவும் பயந்தேன். ஒரு அடிக்கு ஒருதரம் கடவுளை நினையாத நேரம் கிடையாது. இதற்கு முன் என் ஆயுளில் இப்படிப் பட்ட காட்டையோ அல்லது மிருகங்களேயோ நான் கணடதில்லே. மத்தியானம் இருக்கும். மிகப் பயங்கரமான யானைாளின் சத்தம் கேட்டது. பய மிகுதியால் என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லே. சமீபத்தில் உள்ள மரத்தில் அதி வேகமாய் ஏறினேன். எப்படி யேறினேன் என்பது எனக்கே தெரியாது. மரத்தில் ஏறிச் சத்தம் வந்த திக்கை நோக்கினேன். மிகப் பெரிய யானை ஒன்ருேடொன்று பயங்கரமான சத்தத்துடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தன. கொஞ்ச நேரத்திற்குப் பின் ஒரு யானை யோட, மற்ற யானை அதைத் துரத்திக் கொண்டு போயிற்று.

இரண்டும் அதிக தூரத்தில் போய்க் காட்டில் மறைந்து விட்டது. மெதுவாக மரத்திலிருந்து இறங்கினேன் ; மேற் கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.

அன்று மாலே என் பாதையிலிருந்து அதிகத் தூரத்தில் காட்டெருமைகள் மேய்ந்து கொண்டிருந்தது. அந்த மைதானத்தில் சுமார் இரண்டு அடி உயரம் புல் வளர்ந்திருந்தது ! நான் பயந்துப் போய்க் கொண்டு இருந்தேன். என் பயத்திற் கேற்ருர் போல் அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு எருமை என்னே நோக்கி ஓடி வந்தது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லே என் முதுகிலிருந்த சுமையைக் கீழே போட்டு விட்டு என் பலம் கொண்டவரை வேகமாய் ஓடினேன். அந்த எருமையும் என்னே நோக்கியே ஓடி வந்தது இன்னும் சில நிமிஷத்தில் மாடு என்னே முட்டிக் கொன்று விடும்.

சமீபத்தில் ஒரு மரமும் கிடையாது. இந்த நிலையில் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இன்னும் வேகமாய் ஓடினேன். நான் ஓடிய வேகத்தில் 'என் தலையில் இருந்த தொப்பி காற்றில் பறந்து விழுந்து விட்டது. அதைப் பற்றி நினைக்கக் கூட நேரம் கிடையாது. தொப்பி போனால் போகட்டும். நான் உயிர் தப்பினால் போதும் என்னும் மனப்பான்மையில் ஓடும் போது, காலில் என்னவோ தடுக்கி கீழே விழுந்தேன். விழுந்தவுடன் உருண்டு போய் புல்லுக்குள் மறைந்து விட்டேன்.

நான் ஓடியதாலும் பயந்திருந்ததாலும் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை வியர்த்திருந்தது. மெதுவாகத் தலையைத் தூக்கி எருமை மாட்டைப் பார்த்தேன் அது என் தலையிலிருந்து விழுந்தத் தொப்பியை முட்டிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திற்குப் பின் அந்த எருமை மற்ற எருமைகளுடன் சேர்ந்து விட்டது. பின் மெதுவாக எழுந்துத் தொப்பி இருந்த இடத்திற்குப் போய்த் தொப்பியைப் பார்த்தேன். அது சப்பையாகப் போயிருந்தது தொப்பியைக் கையில் எடுத்துக் கொண்டு சாமான்களிருந்த இடத்திற்குப் போய்ச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு என் பாதை வழியே நடந்து போனேன். தொப்பியைத் தலையில் போடாமல் கையில் எடுத்துக் கொண்டு போனேன். மறுபடியும் எங்கு அந்த எருமை மாடு விரட்டிக் கொண்டு வந்து விடுகிறதோ என்று பயமாகவும் இருந்தது. ஒத்தடிப் பாதையில் தன்னந் தனியாக நடந்து போனேன்; பயங்கரமான காடு. இதைப் பார்க்க பார்க்க இன்னும் கடக் வேண்டிய மிகப் பெரிய காட்டைப் பற்றி யோசித்தேன். காட்டின் எல்லையே இப்படிப்பட்ட பயங்கரமாயிருந்தால் காட்டின் மத்தியில் எப்படி இருக்கும்? புலி, சிறுத்தை, கரடி இப்பேர்பட்ட துஷ்ட மிருகங்கள் வந்தால் என்ன செய்வது என்று நினைத்தேன். என்னை அறியாமலேயே ஒரு வித பயமும் ஏற்பட்டது. சூரியனைப் பார்த்தேன். அது மேற்கே அதி வேகமாய் விழுந்து கொண்டிருந்தது. ஆகையால் நான் இன்னும் வெகு வேகமாய் நடந்தேன். எவ்வளவு தூரம் வந்தேன், இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும் என்பது எனக்குத் தெரியாது.

இருந்தாலும் நான் நடப்பதை நிறுத்தவில்லை. கொஞ்ச நேரத்திற்குள் இருட்ட ஆரம்பித்தது, என் டார்ச்சை எடுத்து நடக்க ஆரம்பித்தேன். ஒரு பக்கம் சாப்பிடாததினால் பசி; மறு பக்கம் எப்படியும் காட்டிலாகா ரேஞ்சர் வீட்டிற்குப் போய்ச் சேர

வேண்டும் என்னும் எண்ணம். இன்னும் கொஞ்ச தூரம் போனேன். இருட்டி விட்டது. என் விளக்கின் வெளிச்சம் தவிர எங்கும் காரிருள். நிலாவும் கிடையாது. காட்டு நரி ஊளையிடும் சத்தம் என் காதைப் பிளந்தன. கொஞ்ச தூரத்தில் மனதக் குரல் கேட்டது. நான் தமிழிலும் ஆங்கிலத்திலும், அங்கு யார்? அங்கு யார்? என்று தொண்டை நோகும்படி கத்தினேன். பேசும் சத்தம் நின்றது. எனக்கு பயம் அதிகரித்தது. பேயோ! அல்லது பூதமோ பேசியிருக்கும்? அப்படிப் பேய் வந்தால் என்ன செய்வது? இந்த விதமாய் நான் நினைத்த போது என் உடல் பயத்தால் நடுங்கிற்று.

பேய் காட்டில் இருக்காது என்று என்மனதை நானே தைரியப் படுத்திக் கொண்டேன். இன்னும் கொஞ்ச தூரம் போனேன். மறுபடியும் நான் சத்தம் போட்டேன் பதில் சத்தம் தருவதற்குப் பதில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது, நான் இன்னும் பயந்தேன். எங்கு துப்பாக்கித் தோட்டா என்மேல் படப் போகிறதோ என்று. "நான்தான் சிநேகிதன்" என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் கத்தினேன். கொஞ்ச நேரத்திற்குள் என் முன்னால் விளக்கு வெளிச்சம் தெரிவதும் அணைவதுமாய் இருந்தது. என் டார்ச்சினால் வெளிச்சம் தெரிந்த திக்கை நோக்கிக் காண்பித்தேன், என் முன்னுக்குத் தெரிந்த வெளிச்சம் வர வர சமீபம் நெருங்கிற்று. நானும் முன் னேறி நடந்தேன். எதிரில் மூன்று பேர் துப்பாக்கிகளுடன் என்னை நோக்கி வந்தனர். அவர்கள் சிங்களத்தில் (அவர்கள் பேசும் பாஷை) என்னவோ கேட்டார்கள். அது எனக்கு விளங்கவில்லை. நான் இவர்களைத் தமிழில் ரேஞ்சர் வீடு எங்கே இருக்கிறது என்று கேட்டேன். அது அவர்களுக்கு விளங்கிற்றோ இல்லையோ எனக்குத் தெரியாது. நான் என்னைக் காண்பித்து ரேஞ்சர் வீட்டிற்குப் போகவேண்டும் என்று ஜாடை காண்பித்தேன். அவர்கள் என்னமோ பேசிக் கொண்டு என்னை அவர்கள் பின்னால் வரும்படி அழைத் தார்கள்.

நானும் பயத்துடன் அவர்களைப் பின் பற்றினேன். சுமார் ஒரு மணிநேரம் நடந்திருப்போம். அதன்பின் ரேஞ்சர் வீடு வந்தது. நான் அங்கு சாய்மான நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் தான் ரேஞ்சராய் இருக்கும் என்றெண்ணி அவருக்கு வந்தனம் கூறி உதவி சர்க்கார் ஏஜெண்டு (Mr. T. A. Hudson) ஹட்ஸனால் கொடுக்கப் பட்ட கடிதத்தை அவரிடம் கொடுத்து நான் உலக யாத்

ரீகர் என்று சொன்னேன். அவர் என்னை உட்காரும்படி சொன்னார். என்னையழைத்து வந்தவர்களுக்கு 150-சதம் (1-8-0) கொடுத்தேன். அவர்கள் சந்தோஷப் பட்டார்கள் என்பதை அவர்கள் முகம் காண்பித்தது. ஐந்து நிமிஷத்தில் உள்ளிருந்து ஒரு வேலைக்காரன் 2 கோப்பையில் தேத் தண்ணீர் கொண்டுவந்து வைத்தான். எனக்கு மதியம் சாப்பிடாததால் பசி அதிகமாய் இருந்தது. ஆகையால் அவர் சாப்பிடச் சொல்லுமுன் நானே தேத் தண்ணீரை எடுத்துச் சாப்பிட்டேன். அதற்குள் (Mr. A. Engle Brecht) எங்கிள் பிராக்ட் (ரேஞ்சரின் பெயர்) ஹட்சன் எழுதிய கடிதத்தையும் படித்து முடித்தார். ரேஞ்சர் என்னைப் பார்த்து, சுமார் 40 வருடமாக நான் இங்கு இருக்கிறேன். என் தகப்பனாரும் இதே இடத்தில் இருந்தவர் தான். அப்படி யிருந்தும் நாங்கள் இக்காட்டுக்குள் போகத் துணியவில்லை. நீயோ சிறுவன். இக் கொடிய காட்டில் போனால் நீ இறப்பது நிச்சயம், நீ போகாத; என் வார்த்தையைக் கேள்என்று சொன்னார். நான், எனக்கு உலகத்தில் கடவுளைத் தவிர வேறு யாரும் கிடையாது. இக்காரியத்தைச் சாதிப்பதால் என் உயிர் போனாலும் பரவாயில்லை என்று சொன்னேன்.

## அத்தியாயம். 7

### யாலாக்காட்டைத் தாண்டுதல்

மறுநாள் காலை 4 மணிக்கு எழுந்தோம். காலைக் கடனை முடித்தபின் எங்கிள் பிராக்டும் அவருடைய காவலாளிகளும் என் கூடக் காட்டின் எல்லையில் உள்ள ஆற்றங்கரை வந்தனர். ஆற்றில் நான் இறங்குமுன் அவர் என்னைப் பார்த்து, தம்பி! இக்காரியத்தில் நீ வெற்றி யடைவாய். இதுவரை இதில் போக, யாரும் துணிந்தது கிடையாது. உன்னிடம் துப்பாக்கிக் கூட இல்லாமல் போகிறாய். ஆண்டவன் உன்னுடன் இருந்து காப்பாற்ற வேண்டும் காட்டை கடந்த பின் எனக்கு அறிவிக்க மறக்காதே. ஜாக்கிரதையாகப் போ. இக் காட்டை நினைத்தால் எனக்கே பயமா யிருக்கிறது பலர் இக் காட்டில் போக நினைத்து வெற்றி பெறாமல் இரண்டு மூன்று நாட்களில் திரும்பி வந்தனர், ஆனால் நீ இச் சிறுவயதில் முற்பட்டது உன்னுடைய வீரத்தைக் காட்டுகிறது. இதே மாதிரி ஆறு தென்பட்டால், நீ காட்டை தாண்டியதாக நினைத்துக்கொள் என்று சொல்லி என் குறிப்பு புத்தகத்தில் யாலக்காட்டை கடக்கும் முதல் மனிதன் (First man to cross "Yala" A. Engle Brecht, Ranger, Yala Game Centuary) என்று எழுதினார்.

என் சமான்களை நன்றாகக் கட்டி தலையில் வைத்து ஆற்றில் மெதுவாக இறங்கினேன். கொஞ்ச தூரம் போனதும் மார்பு அளவு தண்ணீர் இருந்தது. பிற்பாடு கழுத்து வரைக்கும் வந்து விட்டது. நான் நீந்த ஆரம்பித்தேன். தண்ணீர் ஓடும் திசையாகப் போய் அக் கரையை அடைந்தேன்.

அதுவரை அவர்கள் கரையில் நின்று கொண்டிருந்தார்கள் கொஞ்ச தூரம் கரை யோரமாய் போனேன். மிருகங்கள் தண்ணீர் குடிக்க வரும் ஒரு பாதையைக் கண்டு அதன் வழியாக காட்டில் நுழைந்தேன். கண்ணுக்கு எட்டும் தூரம் நான் போகும் வரை அவர்கள் அங்கேயே இருந்தனர். பின் கையை காண்பித்து விட்டு அவர்கள் போய்விட்டார்கள். இக் காட்டில் மனிதர் போன தடம் கிடையாது. என்னைத் தவிர வேறு யாரும் கிடையாது. நான் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அக் காட்டைப் பற்றி நான் விபரமாக எழுத இப்புத்தகத்தில் இடம் கிடையாது. பல முறை ஆச்சர்யமாய் கடவுள் என்னை பல கஷ்டங்களினின்றும் தப்பு வித்தார். என் உயிர் எந்த நிமிஷம் போகும் என்பது எனக்கே தெரியாது. எங்கும் அடர்த்தியான மரங்கொடிகள். என் கைக் கோடாலியால் நான் போன பாதையில் மரங்களை வெட்டி அடையாளம் வைத்துக் கொண்டு போனேன். சில சமயங்களில் வெறும் வெட்ட வெளியாக இருக்கும். என் கம்பாஸ்ஸைப் பார்த்து வட கிழக்கு பக்கம் நோக்கி போனேன். முதல் நாள் எவ்விதமான கஷ்டமும் ஏற்படவில்லை, அன்று மாலை சுமார் 4 அல்லது 5 மணி இருக்கும். என்னிடம் கடியாரம் கிடையாது. சூரியனைப் பார்த்து நேரத்தை நிர்ணயம் செய்து கொள்வது. படுப்பதற்கு வசதியான இடம் தேர்ந்தெடுத்தேன். மரத்தின் மேல் ஏறி என் வலையை நன்றாய்க் கட்டினேன் பின் சில காட்டு கட்டைகளை கொண்டுவந்து சேர்த்து நெருப்பு மூட்டினேன். கொஞ்சம் ரொட்டியும் பாலும் சாப்பிட்டு விட்டு மரத்தில் ஏறி படுத்துக் கொண்டேன். என் சாமானையும் மரத்தின் ஓர் கிளையில் கட்டி விட்டேன். தூக்கம் வர வில்லை, பாம்பு வந்தால் என்ன செய்வது? யானை வந்தால் நம் தொட்டில் அதற்கு எட்டுமோ? சிறுத்தை மரத்தில் ஏறி வந்தால் எப்படி தப்புவது? என்று எண்ணமிட்டேன். இப்படி எண்ணிக் கொண்டே தூங்கிவிட்டேன். காலை சூரியன் தன் ஒளியை என்மீது வீசும் பொழுதுதான் நான் எழுந்தேன். இப்படி இக்காட்டில் $10\frac{1}{2}$ நாள் அதாவது 10 இரவையும் இக்காட்டில் கழித்தேன். சுருக்கமாக சில முக்கிய சம்பவங்களை எழுதுகிறேன்:—

ஒரு நாள் நான் போகும் பாதையில் ஓர் சிறு யானைக் குட்டி நின்று கொண்டிருந்தது. அது என்னை ஒன்றும் செய்யமுடியாது, என் இடுப்பு அளவுதான் இருக்கும். நான் அதன் மேல் ஆசை கொண்டேன். இதை எப்படியும் பிடிக்க வேண்டும். இதன்மேல் நம் சாமான்களை வைக்கலாம், பெரியதாக வளர்ந்தால் நாமும் ஏறிக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.

என் கயிற்றை எடுத்து மெதுவாக அதன் சமீபம் போனேன். அது ஓடாமல் என்னையே பார்த்துக் கொண்டு இலைகளைத் தின்று கொண்டு இருந்தது.

எனக்கும் அக்குட்டி யானைக்கும் சுமார் 5 கெஜ தூரம் இருக்கும். அக் குட்டி திடீரென்று ஒரு சத்தம் போட்டது. மரங்களின் மறைவிலே இருந்த ஓர் யானை திடீரென்று வெளிக் கிளம்பியது. அதைப் பார்த்த எனக்கு உடலில் உயிர் கிடையாது. யானையைக் கண்ட நான் குட்டியைப் பிடிப்பதை விட்டு விட்டு அதி வேகமாய் ஓடினேன். அதிக தூரம் போய்த் திரும்பிப் பார்த்த போது பெரிய யானை தன் குட்டியை அழைத்துக் கொண்டு காட்டினுள் நுழைந்து விட்டது.

நான் என் வழியைப் பார்த்து நடக்க ஆரம்பித்தேன். இன்னொரு முறை நான் மத்தியானம் ஓர் மரத்தடியில் உட்கார்ந்து என் ஆகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன். அப்பொழுது என் கவனம் முழுவதும் ஆகாரத்தின்மேல் இருந்தது. திடீரென்று எங்கிருந்தோ ஓர் சிறுத்தை தன் வாயில் என்னமோ ஓர் பெரிய துண்டைக் கவ்விக் கொண்டு என் முன்னால் சுமார் 10 கெஜ தூரத்தில் நின்றுக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த நான் பயத்தினால் திடீரென்று ஒரு பெரிய சத்தம் போட்டேன். எந்த விதமாய் நான் சத்தம் போட்டேன் என்பது எனக்கே தெரியவில்லை! நான் போட்ட சத்தத்தில் அந்தச் சிறுத்தை தன் வாயில் இருந்ததைப் போட்டு விட்டு ஓடி விட்டது. நான் தின்னது பாதி தின்னாதது பாதியாக என் மூட்டையை முதுகில் போட்டுக் கொண்டு அதி வேகமாய்ப் போனேன்.

இன்னொரு முறை நான் ஓர் மைதானத்தின் வழியாகப் போனேன். வழியெல்லாம் முழங்கால் அளவு புல். சற்று தூரத்தில் சுமார் 2 அடி நீளமுள்ள ஓர் பெரிய கட்டை நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. அது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. என் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் (Binocular) அதை

உற்றுக் கவனித்தேன். அது கட்டை தான்! சந்தேகம் இல்லை. ஆனால் அது எப்படி நகர்ந்து போகிறது என்று அறிய அதிக ஆவல் கொண்டு என் பாதையை விட்டு அதன் சமீபம் போனேன்.

கையில் என் கோடாலி தயாராக இருந்தது. சமீபத்தில் நான் போகப் போக அதுவும் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. அதிக சமீபத்தில் போய் விட்டேன். திடீரென்று ஓர் காட்டுப்பன்றி ஓடிற்று. அதைப் பார்த்தவுடன் எனக்குப் பயம் ஏற்பட்டது. காட்டுப் பன்றியின் முதுகில் இருந்த பட்டையும் விழுந்தது. இன்னொரு முறை ஓர் காட்டு எருமை என்னைத் துரத்தியது. நான் என் மூட்டையை கீழே போட்டு விட்டு சமீபத்தில் இருந்த ஓர் மரத்தின் மீது ஏறினேன். அது அதி வேகமாய் ஓடி வந்து பலமுறை முட்டியது மரம் சிறியதாயிருந்ததால் அது முட்டிய வேகத்தில் மரம் குலுங்கிற்று மரத்தினடியில் அது அதிக நேரம் நின்றுக் கொண்டே இருந்தது. பின் மற்ற மாடுகளுடன் போய்ச் சேர்ந்து விட்டது.

ஒருநாள் என் பாதை வழியாக நடந்து போனேன். அதிக களைப்பாய் இருந்ததால் எங்கேயாவது உட்காரவேணும் போலிருந்தது. எனக்கு முன்னால் கொஞ்ச தூரத்தில், ஓர் மரத்தின் வேர் பாதையின் குறுக்கே இருந்தது. அதன் மேல் உட்கார்ந்து இளைப்பாற எண்ணினேன். அதன்படியே வேரின் மேல் உட்கார்ந்து என் முதுகிலிருந்த மூட்டையை கழட்டிப் பின்பக்கம் வைத்தேன். தாக சாந்திக்கு கொஞ்சம் தண்ணீரும் குடித்தேன். இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இராது என்பது பழமொழி. என் இடுப்பில் என் கத்தி சும்மா தொங்கிக் கொண்டிருந்தது. இந்த வேரில் எவ்வளவுதூரம் பாயும் என்று பார்க்க ஆவல். ஆகையால் கத்தியைக் கையில் எடுத்தேன். ஓங்கினேன். ஒரே குத்தாக வேரில் குத்தினேன். ஹா! என்ன ஆச்சரியம்! சிவப்பு நிறமான நீர்! இல்லை, இல்லை! ரத்தம்! ரத்தம்! வேரிலிருந்து பீரிட்டு என் கையெல்லாம் நனைந்து விட்டது, பயந்து போய்விட்டேன், ஓர் கூச்சல். எடுத்தேன் ஓட்டம் இதெல்லாம் சில வினாடியில் நடைபெற்றன.

கொஞ்ச தூரம் போய்த் திரும்பிப் பார்த்தேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அந்த வேர் என் கத்தியுடன் நகர ஆரம்பித்தது. மறுபடியும் நான் அந்த வேரையே நன்றாய் உற்றுப் பார்த்தேன். வேரின் அடிப் பாகத்தில், மலைப்பாம்புக்கு இருக்கும் கோடுகளைப் போல அருந்தது. இவ்வளவு நேரம் நான் உட்கார்ந்திருந்

த்தி வேர் அல்லவென்றும், அது ஓர் மலைப்பாம்பு என்றும் தெரிந்த போது எனக்கேற்பட்ட பயத்திற்கு எல்லை கிடையாது. பாதையின் வலது பக்கத்தில் இருந்து இடது பக்கமாக நகர்ந்து சென்றது. என் கத்தியும் அதன் முதுகோடே சென்றது. சுமார் $\frac{1}{4}$ மணி நேரத்திற்குப் பின், அதன் வாலின் நுனியைக் கண்டேன். அதன் வாய்ப் பக்கம் நான் இருந்திருந்திருந்தால் அது என்ன செய்திருக்குமோ?

நீண்ட நேரத்திற்குப் பின் மெதுவாகப் போய் என் பையை எடுத்து முதுகில் மாட்டிக் கொண்டு அதி வேகமாய்ப் போனேன்.

ஒரு நாள் இரவு ஓர் மரத்தடியில் நெருப்பு மூட்டி மரத்தின் மேல் என் தொட்டில் கட்டி எப்பொழுதும் போல் படுத்தேன். காலை எழுந்து பார்த்தேன். அப்பொழுது ஒரு பெரிய மலைப்பாம்பு நெருப்புப் பக்கத்தில் சுருண்டு கிடந்தது, அதைப் பார்த்து நான் மரத்திலிருந்து எப்படி இறங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். பின் மூட்டையை நேராகப் பாம்பைப் பார்த்து தொப் பென்று போட்டேன். அந்தப் பாம்பு மெதுவாக நகர்ந்து போய் விட்டது.

ஒரு நாள் ஓர் சம்பவம் நடந்தது. அதை நினைக்கும் போதே என் குலை நடுங்குகிறது. ஓர் காட்டெருமை என்னைத் துரத்த ஆரம்பித்தது. வழக்கம் போல் என் முதுகில் இருந்த மூட்டையை கீழே போட்டுத் தலை தெறிக்க ஓடினேன். மாடும் என் சமீபத்தில் வந்து விட்டது. உடனே நான் சமீபத்திலிருந்த மரத்தின் சமீபம் ஓடி ஓர் கிளையைத் தாவிப் பிடிக்கப் போனேன். அதே கிளையில் ஓர் சிறுத்தை நின்றுக் கொண்டிருந்தது. அதையும் பார்த்த நான் பாதி பிடித்ததும் பிடிக்காததுமாய் பயத்தில் "ஐயோ செத்தேன்!" என்று கத்திக் கொண்டு ஒரு கையில் பிடித்தக் கிளையையும் விட்டு விட்டேன். இவை ஒரு நிமிஷத்துக்குள் நடந்தது. பயத்தினால் அப்படியே மூர்சித்துக் கீழே விழுந்தேன். அதிக நேரம் வரை என்ன நடந்ததென்று எனக்கே தெரியாது. சுமார் 20 அல்லது 30 நிமிஷங்களுக்குப் பின்னால் பிரக்ஞை வந்தது. மெதுவாகக் கண்ணைத் திறந்து மரத்தைப் பார்த்தேன். மரத்தில் சிறுத்தை இல்லை. எழுந்து சுற்றிலும் பார்த்தேன். கொஞ்ச தூரத்தில் சிறுத்தையும் எருமையும் ஒன்றோடொன்று சண்டைப் போட்டுக் கொண்டிருந்தது. சுமார் 2 மணி நேரம் வரை இரண்டும் பயங்கரமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்தன. கடைசியில் எருமை தன் கொம்பினால் குத்தி அப்படியே சிறுத்தையைத் தூக்கி விட்டது. கொம்பில்

மாட்டி கொண்டிருந்த சிறுத்தைக் கால்களை ஆட்டிக் கொண்டிருந்தன. இந்த விதமாக என்னைக் கடவுள் ஆபத்தினின்றும் காப்பாற்றினூர். கடவுளை நம்பினவர்களை எப்படியும் காப்பார், இது என் சொந்த அனுபவம்.

பதினேராம் நாள் மதியம் ஓர் அகன்ற ஆற்றைக் கண்டேன். எனக்குண்டான ஆனந்தம், எல்லையற்றது. காட்டைத் தாண்டிவிட்டோம், நம் காரியம் வெற்றி பெற்றது என்று திண்ணமாக நினைக்கும் பொழுது, காட்டில் நான் பட்ட கஷ்டங்கள் எங்கோ ஓடி விட்விட்டது. ஆற்றை அடைந்தேன். ஆற்றில் இறங்கி ஆற்றையும் கடந்தேன். கொஞ்ச தூரம் போன பின் திடீர் என்று மனிதர்களின் அடிச் சுவடுகளைக் கண்டேன். அச்சுவடுகள் போன பாதையாகப் போனேன். அன்று மாலை சுமார் 5 மணி இருக்கும். சில வீடுகள் தெரிந்தன. நேராக அந்த வீட்டுக்குப்போய், "நான் யாலாக் கட்டை தாண்டி வந்ததாக" அவர்களிடம் சொல்லி அன்று இரவு தங்க இடம் கேட்டேன். முதலில் யாரும் நம்பவில்லை. அக் காட்டில் அதிக பயங்கரமான யானைகளும், எருமைகளும் இருக்கும் காடாயிற்றே. நீ எப்படிக் கடந்தாய் என்று ஒவ்வொருவரும் என்னை ஆச்சரியத்துடன் கேட்டனர். என் கதையை அவர்களுக்குச் சொன்ன பின் நம்பினர்.

எனக்கு உடனே நல்ல விதமாக ஒரு வீட்டார் ஆகாரம் தயார் செய்து அவர் வீட்டில் சாப்பிட்டுத் தங்கும்படிச் சொன்னூர்கள். சாதத்தை 10 நாட்களாகப் பார்க்காததினுல் "காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் விழுந்த மாதிரி" நான் என்முன் இருந்த ஆகாரத்தை இலையைத் தவிர மற்றெல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டு மறுநாள் 10 மணி வரை நன்ருகத் தூங்கி எழுந்தேன்.

இந்த ஊரின் பெயர் உகந்தை. இங்கு ஓர் கோவிலும் அதன் சமீபத்தில் ஓர் பாறையும் இருக்கிறது. அந்தப் பாறையில் ஓர் சிறு குளமும் 32 நீர் ஊற்றுகளும் இருந்தன. இதில் என்ன விசேஷம் என்ருல், அந்த நீர் ஊற்றிலிருந்து எவ்வளவு தண்ணீர் எடுத்தாலும் முன்பு இருந்த அதே அளவுக்கு நீர் மறுபடியும் வந்து விடுகிறது. அதன் ஆழத்தைப் பார்க்க எண்ணி, நான் தைப்பதற்கு வைத்திருந்த நூலின் நுனியில் ஓர் சிறு கல்லைக் கட்டி அதில் போட்டேன். ஆனுலும் அடிவரை அந்தக் கல் போகவில்லை என்பதை நான் உணர்ந்தேன். நான் வைததிருந்த நூலின் நீளம் 200 கெஜம்.

இதை அந்தக் கோயில் பூசாரி எனக்குக் காண்பித்த பின் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். மணலில், ஓர் மனித உருவம், அதன் பக்கத்தில் ஓர் பெண் உருவம், அவர்களுக்குப் பின்னால் ஓர் நாய், அந்த மனித உருவத்தின் கையில் ஓர் கோடாலி, முன் புறம் இரண்டு படகு இவை எல்லாம் கல்லால் செய்யப் பட்டிருந்தது.

இவைகளை எல்லாம் அந்தப் பூசாரி எனக்குக் காண்பித்தார். நான் அவரை, ",இதில் என்ன விசேஷம்? யாராவது செய்து வைத்திருப்பார்கள்!" என்றேன். அதற்கு அவர் "அப்படிச் சொல்லாதீர்கள்! இது சரித்திர சம்பந்த முள்ளது" என்று கீழ் கண்ட விஷயத்தை எனக்குச் சொன்னார். அவர் சொல்லியதை அப்படியே தருகிறேன்.

ஆதிகாலத்தில், கந்த சுவாமியும் அவர் மனைவியும், தங்கத்தால் செய்யப்பட்ட இரண்டு படகில் இங்கு வந்தார்கள். படகை விட்டு விட்டுக் கதிர் காமத்திற்குச் சென்ற போது ஓர் வேடுவனும், அவன் மனைவியும் இதைக் கண்டதாயும், அவன் அந்தத் தங்கத்தில் கொஞ்சம் வெட்ட எண்ணிக் கோடாலியை ஓங்கினபோது, கதிர் மத்தில் இருந்தக் கந்தசாமிக் கடவுள் ஞானத்தால் கண்டு எல்லாவற்றையும் கல்லாய் சபித்ததாகவும் அந்தச் சாமியார் எனக்குச் சொன்னார்.

இவைகளைப்பார்த்தபின் இங்கிருந்து புறப்பட்டு மாலை பொத்துவில் வந்துசேர்ந்தேன். என் வரவிற்காக அங்குள்ள அதிகாரிகளும் சிலபத்திரிகை நிருபர்களும் காத்திருந்தனர். அதிகாரியினிடம் நான் எடுத்த எல்லாப் படங்களையும் கொடுத்து நான் வந்த பாதையைப் பாடமாக எழுதிக் கொடுந்தேன். எல்லாரும் என்னைக் கும்பல் கும்பலாக வந்து பார்த்து, "காட்டை எப்படிக் கடந்தாய்?" என்று வியப்புடன் கேட்டனர். எனக்குச் சாப்பிட நிறைய பக்ஷணங்களும், பழங்களும் கொடுத்தனர். இந்த ஊரில் சில நாள் தங்கிக் களைப்பு நீங்கியபின் தொடர்ந்து நடந்தேன், மட்டக்கொளும்பு திருக்கோணமலை முதலிய இடங்களைப் பார்த்தபின் மறுபடியும் கடற்கரையோரமாகச் சென்றேன். புள்ளமடை என்னும் ஊர்வரை ஒருவித மான கஷ்டமும் கிடையாது. கடற்கரையில் மீன் பிடிப்பவர்கள் எனக்கு மிகவும் உதவி செய்தனர்.

## அத்தியாயம். 8

### கடலுக்கு சாமான் பறிகொடுத்தல்

புள்ளமடையிலிருந்து புறப்பட்டு அன்று முழுவதும்நடந்தேன். மாலை 4 மணி இருக்கும். வீடோ அல்லது வீடுகளோ இருப்பதாக எந்தவிதமான அடையாளமும் தெரியவில்லை. ஆகையால் அன்று இரவை கடற்கரையில் கழித்தேன். மறுநாள் காலைஎழுந்து மறுபடியும் நடக்க ஆரம்பித்தேன். வழியில் மனிதர் யாரையும் காணவில்லை அன்றுமாலை ஓர் ஆற்றின் கரையில்கொண்டுபோய்விட்டது. ஆற்றை பார்த்தவுடன் வயறு கபீர் என்றது. என் என்றால் அது முகத்துவாரம், தண்ணீர் அதிவேகமாய் கடலில் விழுந்துக் கொண்டு இருந்தது. மிகவும் அகலமான ஆறு. இதை எப்படிக் கடக்கப்போகிறேன்என்று பயந்தேன். அன்று இரவையும் கடற்கரையிலே கழித்தேன்; மறுநாள் ஆற்றைக் கடப்பதற்குத் திட்டம் போட்டேன்.

கடற்கரையில் என் சாமான்களை வைத்து விட்டு காட்டில் போய்த் தெப்பம் செய்வதற்கு ஏற்ற மரங்களாக வெட்ட ஆரம்பித்தேன், என் ஆகாரம் ஆகிவிட்டது. அன்று முழுவதும் பட்டினி. இரண்டு நாள் பட்டினியாக காட்டில் கட்டைகளை வெட்டி சேகரம் செய்தேன் இங்கு எவ்விதமான மிருகங்களும் கிடையாது. மூன்றாம் நாள் காட்டில் இன்னும் சில பட்டைகள் (மரங்களை ஒன்றாய் கட்டுவதற்கு) வெட்டப் போனேன். வழியில் பல பழங்களைக் கண்டேன். பார்ப்பதற்கு தர்ப்பூசனிப் பழத்தைப் போலிருந்தது. கையில் இருந்த கோடாலியால் அதை இரண்டாகப் பிளந்து பார்த்தேன். ஆம்! கடவுள் நான் பட்டினியாக இருக்கக் கூடாது என்று இப் பழத்தை எனக்குக் காண்பித்தார் என்று நினைத்தேன்.

மர நார்களை உரிப்பதை விட்டு என் சட்டையைக் கழட்டி அதில் பெரியதாகப் பார்த்து நான்குப் பழங்களைப் போட்டு மூட்டைக் கட்டி கடற்கரைக்கு என் சாமான்கள் இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். ஒரு பழத்தை வெட்டிப் பார்த்தேன். நல்ல ருசி மூன்று நாட்கள் பட்டினியாக இருந்ததால் அதிகப் பசி. இரண்டு பழங்களை கப, கப என்று சாப்பிட்டேன். களை தீரமணலில் படுத்தேன்.

சில நிமிஷங்களில் உடல் ஒரே வீக்கமாக வீங்க ஆரம்பித்தது. இதைக் கண்டு நான் திடுக்கிட்டேன். உடனே கடலில் இடுப்புத் தண்ணீரைப் போய் கடல் நீரை வயிறு நிறையக் குடித்து வாயில்

கையைப் போட்டு எவ்வளவு வாந்தி எடுக்க முடியுமோ அவ்வளவு எடுத்தேன். இதைப் போல் பல தடவை செய்து என் வயிற்றைக் காலி செய்தேன். ஒரே மயக்கமாய் இருந்தது, தள்ளாடிக் கொண்டு கரைக்குப் போய் அப்படியே படுத்தேன். நன்ருய்த் தூங்கி விட்டேன்.

மறுநாள் காலை எழுந்து இன்று எப்படியும் ஆற்றைக் கடக்க வேண்டும். இல்லையேல் பட்டினியால் இறந்து விடுவோம் என்று எண்ணி நான் சேகரம் செய்திருந்த கட்டைகளை ஒன்ருேடு ஒன்ருய் நாரினல் கட்டினேன். சாமான்களையும் நன்ருக கயிற்றினல் கட்டி என் செருப்பு முதல், தொப்பி வரை தெப்பத்தின் மேல் தண்ணீர் படாதவாறு வைத்து தண்ணீரில் தள்ளினேன். பின் நானும் தண்ணீரில் இறங்கி ஓர் கையில் தெப்பத்தைப் பிடித்துக் கொண்டு ஒரு கையால் நீந்த ஆரம்பித்தேன். தண்ணீர் ஓடும் வேகத்தில் நானும் என் தெப்பமும் கடலை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தோம். நான் கூடுமானவரை அக்கரை சேர எண்ணி என் பலம் கொண்ட மட்டும் நீந்த ஆரம்பித்தேன். நானும் என் தெப்பமும், திடீரென்று ஒரு சுழலில் மாட்டிக் கொண்டோம். சுழலின் வேகத்தில் நானும் என் தெப்பமும் கணக்கில்லா சுற்று சுற்றினேம். சுழலின் வேகம் என்னை தண்ணீருக்கடியில் இழுத்தது. தெப்பம் என்னை மேலுக்கிழுக்க திடீரென்று தெப்பத்தை கட்டியிருந்த நார் அறுந்து விட்டது. ஐயோ! என்று ஓர் கூச்சல் போட்டு வலது கையால் என் சாமான்களை பிடிக்கப் போனேன். சாமான் கையில் அகப்படவில்லை. நான் தணணீருக்கடியில் போய் விட்டேன். அளவுக்கு மிஞ்சின முயற்சி செய்து தண்ணீருக்கு மேல் வந்தேன். சுற்றிலும் பார்த்தேன் சாமான் காணவில்லை. எப்படியோ நீந்தி அக்கரை போய்ச் சேர்ந்தேன்.

நான் போட்டிருந்த ஓர் காக்கி அரைக்கால் சட்டை யைத்தவிர வேறு ஒன்றும் என்னிடம் கிடையாது. ஆற்றையும் கடலையும் மாறி மாறிப் பார்த்தேன். என் சாமான் கண்ணுக்குத் தென்படவில்லை. கஷ்டப்பட்டு நான் எடுத்த படங்கள், பல பிரமுகர்களின் ஆசிச் செய்தியையும் என் தினக்குறிப்புப் புத்தகமும் போனதைப் பற்றித் தான் நான் அதிக கவலையுற்றேன். 4 நாள் பட்டினி. தண்ணீரில் நனைந்திருந்தால் அதிக குளிர். நெருப்பை உண்டாக்க எந்தவிதமான சாதனமும் கிடையாது. போட்டுக் கொள்ள உடை கிடையாது. ஆகையால் கால் சட்டையைக் கழட்டி தண்ணீரைப் பிழிந்து வெய்யிலில் காயவைத்தேன்.

மாலை மணலில் நீளமாக ஓர் பள்ளம் செய்து அதில் படுத்து மணலை என்மேல் கழுத்துவரை போட்டுக் கொண்டேன். அன்று இரவை அப்படியே கழித்தேன். மறுநாள் அதாவது ஐந்தாம் நாள் எழுந்து நடக்கக்கூட முடியவில்லை. பைத்தியக்காரனைபோல் கடற் கரை யோரமாக நடந்து சென்றேன். பசிமயக்கத்தில் வெய்யிலில் நடப்பது சுலபமான காரியமா? என் சாமானை புறிகொடுத்தேன். இனி எதாவது ஊர்வந்தால் அங்கு நாம் தங்கிவிடவேண்டும் யாத் திரை நமக்கு லாயக்கில்லை. கையில் பணம் உடையவருக்குத் தான் இது லாயக்கு என்று எண்ணமிட்டுக் கொண்டே நடந்தேன். கடற் கரை யோரத்தில் ஓர் தேங்காய் கடல் அலைகளால் கரையில் தள்ளப் பட்டிருந்தது. அதைப் பார்த்த எனக்கு ஓர் விதமான புதுத்தெம்பு வந்தது.

நான் ஓடித் தேங்காயை எடுத்து ஆட்டிப் பார்த்தேன். உள்ளுக்கு தண்ணீர் இருப்பதைப்போல சத்தம் கேட்டது! ஆ! நல்லதேங்காய் மேல் இருக்கும் நாறை எப்படி உரிப்பது? கத்தியும் கிடையாது பக்கத்தில் பாரையும் கிடையாது. கொஞ்சம் யோசனை செய்தேன்.

பல்லில் கடித்துக் கடித்து கொஞ்சம் கொஞ்சமாக நாறை உறித்துக்கொண்டே நடந்தேன். இந்த நாறை உறிப்பதற்கு நான் பட்ட கஷ்டம் கொஞ்சம் அல்ல. (இதைப்படிக்கும் நீங்கள் தயவு செய்து ஒரு தேங்காயை பல்லில் உரித்துப் பாருங்கள். அப்பொழுது தான் உங்களுக்கு அதன் கஷ்டம் தெரியும்) நாறை எல்லாம் உரித்த பின் தேங்காயை உடைப்பதற்கு சமீபத்தில் ஒரு மரமோ, அல்லது பாயையோ கிடையாது. என் ஆவல் தீர தேங்காயை முகர்வதும் ஆட்டிப் பார்ப்பதுமாய் நடந்தேன். பின் அதிர்ஷ்டவசமாய் ஓர் பாறை தெரிந்தது. அங்கு போய் உடைத்துப் பார்த்தேன்.

அது அழுகின தேங்காய். சாப்பிடுவதற்கு லாயக்கில்லாத நிலையில் இருந்தது. இதைக்கண்ட நான் அழ ஆரம்பித்தேன். உலகத்தில் மற்றவர்கள் செய்யாத காரியத்தை நாம் செய்ய யத்தனித் தால் அன்றோ நமக்கு இப்படிக் கஷ்டம் என்று எண்ணி நடந்தேன். மாலை நேரம் அதிக தூரத்தில் ஜனங்கள் நடமாடுவதும் வீடுகளும் தெரிந்தன. நான் மெதுவாக அங்கு போய்ச் சேர்ந்தேன். அங்கு ஒரு வீட்டில் பேசக்கூட ஜீவன் இல்லாமல் பசியாக இருக்கிறது கொஞ்சம் ஆகாரம் வேண்டும் என்று கேட்டேன்.

அச் செம்படவர்களில் நல்ல மனமுடைய ஒருவன் என்னை அழைத்துப் பக்கத்தில் உள்ள ஓர் தேத் தண்ணீர் கடைக்கு அழைத்

67716 UR.I'NS 3154

துச் சென்று வேண்டியதைச் சாப்பிடும்படி சொன்னார். ஐந்து நாட்கள் அன்ன ஆகாரம் இல்லாத நான் இதைக்கண்டால் சும்மா இருப்பேனோ? இரண்டு ரொட்டியும் கோப்பை டீயும் குடித்தது தான் தாமதம், தலை சுற்ற ஆரம்பித்தது. அப்படியே பெஞ்சில் படுத்து விட்டேன்.

## அத்தியாயம். 9

### ஜனங்கள் உதவி செய்தல்

அந்த ஆள் பயந்துபோய் சமீபத்தில் உள்ள போலீசுக்கும் டாக்டருக்கும் அறிவித்து அவர்களை அழைத்து வருவதற்குள் டீ கடைக்காரன் என்னமோ செய்து என்னை எழுந்து உட்காரும்படி செய்தான். அதற்குள் இரண்டு போலீஸ் காரரும் டாக்டரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களிடம் நான் பட்ட கஷ்டங்களை விபரமாய்ச் சொன்னேன். முதலில் அவர்கள் நான்தான் ராஜகோபால் என்று நம்பவில்லை. டாக்டர் என்னை அவர் வீட்டுக்கு அழைத்துப் போய், அவர் வீட்டிலிருந்த பழைய பத்திரிகைகளைப் பார்த்து என் படம் வெளி வந்த "டெலி நியூஸ் (Daily News) என்னும் பத்திரிகையை கொண்டு வந்து அதில் உள்ள படத்தையும் என்னையும் ஒப்பிட்டுப் பார்த்தார். நான்தான் அசல் (D. K. Rajagopal) டி. கே. ராஜகோபாலா அல்லது டேப்ளிகேட் ஆளா என்ற சந்தேகம்! அவர் திருப்தி அடைந்தபின் இரவு ஆகாரமும் படுக்க இடமும் மாற்று வஸ்திரமும் கொடுத்தார். அவர் பெயர் Dr. பி. கந்தசாமிபிள்ளை.

மறு நாள் அவர் நன்மனம் உள்ள சிலரை அவர் வீட்டிற்கு அழைத்து, என்னை அறிமுகப்படுத்தி எனக்குப் பொருள் உதவி செய்யும்படி கூறினார். எல்லோருமாகச் சேர்ந்து எனக்கு 37 ரூபாய் 75 சதம் கொடுத்தனர். அந்த ஊர்ப் பெயர் முல்லைத்தீவு. இந்தப் பணத்தில் எனக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கினேன். புது யாத்ரீகனைப் புறப்பட்டேன். பருத்தித்துறை, யாழ்ப்பாணம், அனுராதபுரம், புத்தளம் வழியாக நிகம்பு வந்தேன். இலங்கைக் கவர்னர் அவர்களின் அந்தரங்கக் காரியதரிசியிடம் இருந்து எனக்கு ஓர் கடிதம் வந்தது. அதில் மார்ச்சு மாதம் 21-ம் தேதி மாலை 3-30 மணிக்கு மேன்மை தங்கிய கவர்னர் வீட்டிற்குத் தவறாமல் வரும்படி எழுதியிருந்தது; ஆகையால் அதிவிரைவில் கொழும்புப்போய்ச் சேர்ந்தேன்மேன்மை தாங்கிய கவர்னரையும் கண்டேன். நான் யாலாக் காட்டைத் தாண்டியது பற்றி அவர் மிகவும் சந்தோ-

ஷப் படுத்துவதாய்த் தெரிவித்து 150 ரூபாய் சன்மானம் அளித்தார். அன்றி அரசாங்க முத்திரையிட்ட காகிதத்தில் (Best wishes for your Tour; R. E. STAPES Governer of Ceylon) என்று அவர் கைபட எழுதிக் கொடுத்தார்.

கவர்னர் கொடுத்த பணத்தில் என் யாத்திரைக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு, கண்டி வந்தேன். மிக அழகிய ஊர் ஓர் ஏரியும், அதைச் சுற்றிலும் பல குன்றுகளும் உள்ளது. புத்தர் பெருமானின் பல் வைக்கப்பட்ட ஒரு கோயில் உள்ளது. அழகிய சித்திர வேலைகள் அதில் செய்யப்பட்டுள்ளது,

கண்டியில் இருந்துகோடைஸ்தலமாகிய நூரேலியா வந்தேன் இதுவும் மிகநல்லஊர். இங்கு அதிகமாக ஐரோப்பியர்கள்தான் வசிக்,



கண்டியிலுள்ள புத்தர் கோயில்

கிறார்கள். நூரேலியாவிலிருந்து கொஞ்ச தூரம்போனால், அசோக வனம் இருக்கிறது. சதா வண்டுகளின் ரீங்காரம் தொனித்துக் கொண்டேயிருக்கும். இதற்கு அடுத்தாற் போல்மவுண்ட் பீத்ரோ (Mt. Pedro) இதுதான் இலங்கையின் மிக உயரமான மலை இதன் உயரம் 8295 அடி. இதைப் பார்த்து விட்டு ஹட்டன் வழியாக சிவனடி பாதம் சென்றேன். இது இலங்கையின் இரண்டாவது பெரிய மலை. இதன் உயரம் 7352 அடி ஆங்கிலத்தில் (Adams peek) என்று பெயர். இந்த மலையின் மேல் சிவனுடைய பாதம் இருப்பதாக இந்துக்களும், புத்தருடைய பாதம் இருப்பதாக புத்த

மதத்தைச் சார்ந்தவர்களும், ஆதாமுடைய பாதம் இருப்பதாக கிறிஸ்தவர்களும், மகம்மதியர்களும் நம்புகிறார்கள். ஆண்டு தோறும் நடக்கும் திருவிழாவுக்கு ஜாதி, மத வித்தியாசம் இன்றி யாவரும் வருகின்றார்கள். ஆனால் அது யாருடைய பாதம் என்று திட்டமாகத் தெரியாது.



சிவனடி பாத மலையில் உள்ள கோயில்

இதைப் பார்த்த பின் ரத்தினபுரா, முதலிய முக்கியமான எல்லா ஊர்களையும் பார்த்து விட்டு 8-4-1937-ல் இந்தியா வந்து சேர்ந்தேன். பொதுவாக ஜனங்கள் மிகவும் நல்லவர்கள். இலங்கை போலீஸாரைப் போல் நாட்டு மக்களுக்கு சேவை செய்வது போல் கிழக்காசியாவில் ஜப்பானைத் தவிர, வேறு எந்த நாட்டிலும் நான் காணவில்லை. இலங்கையில் நான் 107 நாட்கள் இருந்தேன். தனுஷ்கோடி, ராமனாதபுரம் வழியாக மதுரை வந்தேன். வழக்கம் போல் ஸ்ரீ பாரதி வீட்டில் தங்கினேன். சில நாள் கழித்து திருச்சி, சேலம் வழியாக சென்னை நோக்கி வந்தேன்.

பல பள்ளிக்கூடங்களில் போய் தலைமை ஆசிரியர்களைக் கண்டு நான் யாலாக் காட்டைக் கடந்தேன். பல இடங்களை கால் நடையாக சுற்றியிருக்கிறேன். தங்கள் பள்ளியில் எனக்குக் கொஞ்சம் பேச அனுமதியுங்கள். மேற்கொண்டு யாத்திரைக்கு இஷ்டமிருந்தால் பொருளுதவி செய்யுங்கள் உதவி செய்யா விட்டாலும் பரவாயில்லை

நான் மாணவர்களுக்கு பிரயோஜனப் படக்கூடிய விதத்தில் இருக்க எண்ணம் என்று கூறினால், எங்கள் பள்ளியில் இப்போது பரீக்ஷைக்காக படிக்கிறார்கள் என்றும் இப்போது வசதிப் படாது. அடுத்த மாதம் வந்தால் யோசிப்போம் என்பார்கள். 100 பள்ளிக்கூடங்களில் ஒருவர் மட்டும் வேண்டா வெறுப்பாய் அரை மணி நேரம் கொடுப்பார். என் கதையைக் கேட்ட பின், இன்னும் சிறிது நேரம் கொடுப்பார்கள். பெரும்பாலான தலைமை ஆசிரியர்களுக்கு இம் மாதிரியான காரியங்களை ஆதரிக்க வேண்டும் என்னும் மனப்பான்மையே கிடையாது. சென்னை வந்தேன் சாப்பாட்டிற்கு தாளம் போடும் நிலைமைக்கு வந்து விட்டேன். அந்த சமயத்தில் "நான் கண்ட இலங்கை" என்னும் சிறு புத்தகம் எழுதி பலரிடம் போய்க் காட்டி இதைப் பிரசுரிக்க வேண்டும் நான் கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் பணத்தை தருகிறேன் என்று பலரிடம் கேட்டேன். பிரயோஜனம் இல்லாமற் போய்விட்டது. ஒருவாரம் காலை 5 முதல் மாலை 5 மணி வரை ஒவ்வொரு அச்சுக்கூடமாக, ஏறி இறங்குவதே வேலை. கடைசியாக பிராட்வே லோன்ஸ் கோயர் எதிரில் கேஸரி அச்சுக்கூடத்திற்குப் போய் அதன் மானேஜரைக் கேட்டேன். அவர் தம்பி நீ முதலில் 15 ரூபாய்கொடு. மொத்தம் 35ரூபாய் ஆகும் பிற்பாடு உன்னிஷ்டம்போல் விற்றுக் கொடுக்கலாம் என்று கூறினர். (அவர் பெயர் எல். ரகுராஜ பாரதி) அதன்படி என் ஆப்த நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதி 20 ரூபாய் கடனைக் கொடுக்கும்படி கேட்டேன். அதன்படியே அவரும் அனுப்பினர். என் புத்தகம் வெளி வந்தது. தெருவில் நின்று சத்தம் போட்டு சில பிரதிகளை விற்றுப் பணம் சேகரம் செய்தேன்.

இதைப் பார்த்த ஒருவர் S. I. A. A. (சவுத் இண்டியன் அத்தலிட்டிக் அஸோஸியேஷன்) காரியதரிசிகளுக்கு அறிமுகம் செய்தார். அவர்கள் 1937-ம் வருடம் டிசம்பர் 24 முதல் ஜனவரி 7, 1938 வரை நடந்த எக்ஸிபிஷனில் எனக்கு ஓர் இடம் (Stall) கொடுத்தார்கள். அதில் நான் எடுத்த படங்கள், பிரயாணம் செய்த பாதைகள், மேற்கொண்டு போக உத்தேசித்திருக்கும் பாதை எல்லாம் விபரமாய் எழுதி யாவரும் பார்க்கும்படி வைத்து அதில் என் புத்தகங்களும் வைத்தேன். இதில் கிடைத்த பணத்தை கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்தது போக மீதிப் பணத்தை என் பிரயாணத்திற்காக வைத்துக் கொண்டேன்.

# அத்தியாயம். 10

## வடநாடு போகுதல்

வட நாட்டில் யாத்திரை செய்ய திட்டமிட்டேன். ஓர் சிறு கூடாரம் தைத்துக் கொண்டேன். சென்னையில் எல்லா நண்பர்களிடமும் விடை பெற்றேன். அதில் பல முறை எனக்கு உதவிய நண்பர் மறை திருநாவுக்கரசும் ஒருவர். சென்னையில் நான் எழுதிய "நான் கண்ட இலங்கை" என்னும் புத்தகத்தைப் படித்த பல அன்பர்களில் இவர் ஒருவரே அதிக அன்பும் ஆதரவும் காட்டியவர். 10-1-1938–ல் சென்னையை விட்டு புறப்பட்டு கூடூர். நெல்லூர், ஓங்கோல், குண்டூர், காக்கிநாடா, விசாகப் பட்டணம் முதலிய தெலுங்கு பிரதேசத்தின் வழியாக ஒரிசா மாகாணம் வந்தேன். இங்கு இந்துக்களுக்கு மிகவும் புண்ணிய ஸ்தலமாகிய, பூரி என்னும் இடம் வந்தேன். கடற்கரையோரத்தில் அமைந்த ஓர் நல்ல இடம் என்று சொல்லலாம். இங்கிருந்து நேர்வடக்கே கயா என்னும் ஊரை நோக்கிச் சென்றேன்.

இப்பகுதியில் நான் யாத்திரை செய்யும் போது கோடை காலமாக இருந்தது. அதுவுமின்றி ஊர்களும் அதிக தூரத்தில் இருந்தன. காலை புறப்பட்டால் மாலை வரையில் ஊர் பார்ப்பது கஷ்டம். தண்ணீருக்கும் கஷ்டம். உணவுக்கும் கஷ்டம். பெரும்பாலும் என்னிடத்தில் 'அவல்' இருந்ததினால் ஒருவாறு சமாளித்துக் கொண்டு யாத்திரை செய்தேன்.

பல நாட்களுக்குப் பின் "கயா" என்னும் ஊர் வந்தேன். இங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் தான் புத்த கயா இருக்கிறது. அதையும் பார்க்கச் சென்றேன். அழகிய குளமும், அதன் பக்கத்தில் நான்கு பட்டை கோபுரமும், கோயிலைச் சுற்றி ஆயிரக் கணக்கான புத்த விக்ரகங்களும், பார்க்கத் திகட்டாத சித்திரக் கலையை, என்னால் வர்ணிக்க முடியாது. புத்தர் பெருமான் ஞானம் அடைந்த இடம். எந்த மரத்தின் கீழ்ஞானம் அடைந்தாரோ அந்த மரத்தின் அடிபாகம் இன்றும் இருக்கிறது, உலகின் பல பகுதியிலிருந்தும், வருடம் பூராவும் பல யாத்ரீகர்கள் இங்கு வருகின்றார்கள். இதைப் பார்த்த பின் இந்தியாவிலேயே மிகப் புண்ணிய ஸ்தலம் என்று சொல்லும் இடமாகிய காசியை நோக்கிச் சென்றேன். இப்பகுதியில் வெய்யில் அதிகமாகையால் இரவில் தான் நான் நடக்க ஆரம்பித்தேன்.



புத்தகயாவில் உள்ள கோவிலும் குளமும்

## அத்தியாயம். 11

### பேய் தானு?.........

கயாவிலிருந்து காசிக்கு நல்ல பாதை. ஆகையால் நான் இரவில் நடப்பதும், பகலில் தூங்குவதும் வழக்கம். கயாவை விட்டு புறப்பட்ட மூன்ருவது நாள் இரவு சுமார் 2 மணி இருக்கும். ரோடின் ஓரத்தில் யாரோ நிற்பதுபோல் தெரிந்தது. நான் யார் அது என்று இந்தியில் கேட்டேன். பதில் இல்லை. உடனே என் டார்ச் லைட்டை எடுத்து அடித்தேன். எரியவில்லை. எனக்குப் பயம் அதிகமாய் விட்டது. ஆனுலும் தைரியத்தை விடாமல் நன்ருய் உற்றுப் பார்த்தேன். மரத்தின் அடியில் அந்த உருவம் இருந்தாலும், நிலா அடிக்கடி மேகங்களில் மறைந்ததாலும் சரியாகத் தெரியவில்லை. நான் சிறுவனுய் இருக்கும்போது என் தாய் எனக்கு சொன்னது ஞாபகம் வந்தது. அதாவது பேயின் கால்கள், தரையில் இருக்காது என்று சொல்லியிருக்கிருர்கள். ஆகையால் பேயின் காலை உற்றுப் பார்த்தேன். சரியாக தெரியவில்லை. நான் இன்னும் அருகே போனேன். எனக்கும் உருவம் இருந்த இடத்திற்கும் சுமார் 100 அடி

தூரம் இருக்கும். உருவம் நன்றாய் தெரிந்தது. என் கையில் உருவிய கத்தியை தயாராய் வைத்திருந்தேன்.

தரைக்குமேல் இரண்டு அடி உயரத்தில் அது இருந்தது. இடுப்புக்கு கீழே வெள்ளை வேஷ்டிப் போலும், மேலே கலர் சட்டை போலும் தெரிந்தது. நான் பேயை ரோட்டைவிட்டு போகும்படி சொன்னேன். அதுகேட்காமல் அங்கேயே நின்று கொண்டிருந்தது. காசிக்கு இன்னும் 23 மைல் இருக்கிறது. நான் எப்படியும் காலைக்குள் போய் சேரவேண்டும் ஆகையால் நான் பேயைப் பார்த்து சொன்னேன். நீ, பாதையைவிட்டுப் போகாவிட்டால், என் கத்தியால் குத்திவிடுவேன் என்று பலமுறை சொன்னேன். அது அசையாமல் அப்படியே இருந்தது நான் இன்னும் சமீபத்தில் போனேன். கடவுளை நன்றாய் தியானம் செய்து கொண்டேன். நான் அருகே போகப் போக என் மனம் என்னமோ மாதிரி இருந்தது. ரோட்டை விட்டு பக்கத்தில் வந்தேன். எனக்கு நேராக பேய் இருந்தது. இப்போது எனக்கும் பேய்க்கும் 20 அடி தூரம் இருக்கும் என் முதுகில் இருந்த சாமானுடன், கண்ணை நன்றாய் மூடிக்கொண்டு அதைநோக்கி இன்னும் கொஞ்சம் கிட்ட வந்தேன். கண்ணை மெதுவாகத் திறந்து பார்த்தபோது அது என் கைக்கு எட்டும் தூரத்தில் இருந்தது. கண்ணை மறுபடியும் மூடிக்கொண்டு அதை ஒரே குத்தாக குத்தினேன். நான் குத்திய வேகத்தில் என் கத்தி அதன் உடலில் பதிந்து விட்டது. கத்தியை நான் அதன் உடலில் இருந்து உருவுவதற்குமுன், அதன் கைகள், என்னை பிடிப்பதுபோல் இருந்தது. என் தைரியம் காற்றாய்ப் பறந்துபோய் பயம் ஏற்பட்டுவிட்டது. நான் கத்தியை விட்டு ரோட்டுக்கு ஓடினேன். நான் அதிகம் பயந்திருந்ததால் அப்படியே மூர்ச்சித்து கீழே விழுந்து விட்டேன். அதன் பின் நடந்தது ஒன்றுமே தெரியாது. கார் ஹார்ன்கேட்டது. அத்துடன், இந்தியில் எழுந்திரு. என்னும் சத்தம் கேட்டது நான் மெதுவாகக் கண்ணை திறந்து பார்த்தபோது பேய் அங்கு இல்லை. அதற்குப் பதில் கொஞ்சதூரத்தில் பஸ் நிர்ப்பதைக் கண்டேன். பக்கத்தில் ஒரு ஆள் மரத்தில் சுருக்கிட்டு தொங்கிக் கொண்டிருந்தான். என் கத்தி அவன் இடி வயிற்றில் குத்தப்பட்டிருந்தது!

நான் பிணத்தின் அருகில் போய் என் கத்தியை உருவயத்தனித்தபோது, பஸ்ஸில் இருந்த ஓர் ஆள் இறங்கி என்னைத் தடுத்து என் கன்னத்தில் இரண்டு 'அறை' கொடுத்தான். என்னைப் பேச விடவில்லை. என்னையும் என் சாமானையும், பஸ்சில் ஏற்றி சாஸ்ரம்

என்னும் ஊருக்குக் கொண்டு வந்து போலீஸில் ஒப்படைத்து விட்டனர். நான் போனது முதல் இன்ஸ்பெக்டர் வரும் வரை ஒவ்வொரு போலீஸ்காரனும் என்னை அடித்து சித்ரவதை செய்து என் அந்த மனிதனை குத்தி கயிற்றால், தூக்கினாய் என்று கேட்டனர், அந்த மூட ஆத்மாகளுக்கு நான் சொல்லியும் காதில் விழவில்லை. காலை $8\frac{1}{2}$ மணி இருக்கும், இன்ஸ் பெக்டர் வந்தார், அவரிடம் ஆங்கிலத்தில் என் வரலாற்றைச் சொல்லி இரவு நடந்த வற்றையும் சொன்னேன். அவர் என்னை லாக்கப்யில் அடைத்து விட்டு அவர் சில போலீசாருடன் வெளியில் போய்விட்டார். மாலை அவர் வந்த பின் தான் ஆகாரம் கிடைத்தது. இரவில் லாக்காப்பில் மற்ற கைதிகளுடன் துங்கினேன். மறுநாள் காலை 11 மணிக்கு என்கைகளில் விலங்கிட்டு, அந்த ஊர் மேஜிஸ்டிரேட்முன் அழைத்துச் சென்றனர். மேஜைமேல் என் கத்தி இருந்தது. அவர் என் வாக்கு மூலத்தை வாங்கிக் கொண்டு, கத்தியை எடுத்து கொண்டு போகும் படி சொன்னார். காரணம் செத்த பிணத்தைதான் நான் குத்தினேன் என்று பிணத்தை பரிசோதித்த டாக்டர் சாட்சி சொன்னார். போலீசார் என்னை அடித்து துன்ப படுத்தியதைச் சொன்னதற்கு, அவர் போலீசார் தெரியாமல் செய்திருக்கக்கூடும். இனி அப்படி செய்ய மாட்டார்கள் என்று சொன்னார்.

மறுநாள் அதைவிட்டு காசி வந்தேன். காசி அழகிய ஊர், இந்தியாவின் ஓர் முக்கிய புண்ணிய ஸ்தலம். இங்கு பாரதமாதா கோயிலும் சர்வ கலாசாலையும் இருக்கிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும், அநேக வருடங்களுக்கு முன் எவ்வளவு ஒற்றுமையுடன் இருந்தார்கள் என்பதை இங்குள்ள இந்துக்களின் கோவிலும், மகமதியர்களின் பள்ளி வாசலும் காட்டுகிறது காசியிலிருந்து சிறிது தூரத்தில் ஓர் புண்ணிய ஸ்தலம் உண்டு. இதன் பெயர் ஸ்ரீ சாரனாத் இங்கும் புத்தர். இருந்ததாக சரித்திரம் சொல்லுகிறது. அதன் உட்புறத்தில், புத்தரின் வாழ்க்கை சரித்திரத்தை சித்திர ரூபத்தில் ஜப்பானிலிருந்து வந்த Mr. Kosetsn Nosh னல் சித்தரிக்க பட்டுள்ளது.

உள்புறத்தில் தங்கத்தினல் செய்யப் பட்ட பேழையில் புத்தரின் எலும்பு இருப்பதாகச் சொன்னார்கள். இந்தப் பேழை செய்வதற்கு பர்மா தேசத்திலுள்ள சில பணக்காரர்கள் பணம் கொடுத்துள்ளார்கள்.



ஸ்ரீ சாரனாத்தில் உள்ள புத்தர் கோவில்

இதைப் பார்த்த பின் பல இடங்களில் சுற்றிக்கொண்டு பாட்னா வந்தேன். பாட்னாவில் ஓர் பெரிய நெல் களஞ்சியம் கட்டியிருக்கிறார்கள். அதன் உயரம் சுமார் 100 அடியும் சுற்றளவு 200 அடியும் இருக்கும். பாட்னாவிலிருந்து வங்காளத்தின் கோடை ஸ்தலமான டார்ஜ்ஜீலிங் வந்தேன் இங்கு குளிர் அதிகம். சதா மூடுப்பனிகளினால் மூடப் பட்டிருக்கும்.

மூடுப்பனி இல்லாத நேரத்தில் பார்த்தால் சுற்றிலும் பல அழகிய மலைகள் தெரியும். வெண்ணிரமான மலைகளைப் பார்த்து ஆனந்தித்திருக்கும் போது, திடீரென் மேகங்கள் வந்து அம் மலைகளைக் கவ்விக்கொள்ளும்: மறுபடியும் பனி மறைந்ததும் மலைகள் காட்சி அளிக்கும்.

நான் எவ்வளவோ படங்கள் எடுத்தேன். அவை யாவும் நன்றாய் அமையவில்லை. நான் ஒரு சித்திரக்காரனாய் இருந்தால் சித்தரிக்க முடியும். ஒரு கவியாய் இருந்தால் பல கவிகள் கட்டியிருப்பேன். அல்லது ஓர் எழுத்தாளனாய் இருந்தால் நான் கண்ட காட்சியைப் பற்றிய பல அரிய கட்டுரைகள் எழுதியிருப்பேன். எல்லாவற்றிலும் பூஜ்யம். ஆகையால் இதன் இயற்கை அழகை நான் மட்டும் கண்டு ஆனந்தித்தேன். உங்களுக்கு அளிக்க முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன்............!

டார்ஜீலிங்கில் இருந்து காலிங்பாங் வந்தேன். இங்கிருந்து திபேத் போக திட்டம் போட்டேன். திபேத் போக இரண்டு மார்க்கம் உண்டு. ஒன்று புட்டான் வழியாகப் போகலாம். இல்லா விட்டால் சிக்கிம் வழியாகப் போகலாம்.

## அத்தியாயம். 12

### திபேத் போகுதல்

காலிங்பாங்கில் இருந்து லாசா என்னும் ஊர் சுமார் 400 மைல் தூரம் இருக்கிறது. சிக்கிம், இந்தியாவுக்கும் திபேத்துக்கும் நடுவில் உள்ள ஓர் சிறு சமஸ்தானம். காலிங்பாங்கில் எ. சக்கரவர்த்தி என்னும் வங்காளி நண்பர் மூலமாகத் திபேத் நண்பர் ஒருவரைப் பிடித்து திபேத் பாஷையில் ஓர் பொதுவான கடிதம் வாங்கினேன். கடிதத்தில் நான் ஓர் யாத்திரை வாசி எனவும் எனக்கு ஜனங்கள் இருக்க இடமும், உண்ண உணவும் கொடுத்து உதவும்படியும் எழுதி யிருந்தது. திபேத்தியர்களில் 100-க்கு 99 பேருக்கு வேறு பாஷை தெரியாததால் நான் கடிதம் வாங்கினேன். வழியில் ஏதாவது ஊர் வந்தால் அவர்களிடம் கடிததத்தைக் காட்டி எனக்கு வேண்டிய வசதியைச் செய்து கொள்ள முடியும். காலிபாங்கிலிருந்துப் புறப்பட்டுப் பல ஊர்கள் வழியாகச் சிக்கிம் தலைநகரான காண்டாக் என்னும் ஊர் வருவதற்குள் என் பாடு திண்டாட்டமாய் விட்டது. அது மழைக்காலம். இதுவோ குளிர்ப் பிரதேசம். அத்துடன் மழையில் நனைந்தால் எப்படி இருக்கும்? பல்லோடு பல் யாரிடமும் சொல்லாமல் தந்தியடிக்கும்! எங்கேயாவது ஊர் அல்லது வழி விடுதி வந்தால் தான் குளிர் காய முடியும். வழி விடுதி என்பது நம் நாட்டில் மடம் அல்லது சத்திரம் என்று இருப்பது போல் 10 மைல், 5 மைலுக்கு ஓர் இடத்தில் சிறு கட்டடம் மரத்தால் கட்டி இருப்பார்கள். ஒரு மூலையில் கொஞ்சம் விறகும், மண் பாண்டமும் இருக்கும். ஓர் பாத்திரத்தில் உப்பும், தேயிலையும் இருக்கும்.

வழியில் சாப்பாட்டுக் கடையோ டீ கடையோ இருக்காது. கையில் காசிருந்தும் சாப்பிட ஒன்றும் கிடைக்காது; இப்படி பல நாள் கஷ்டப் பட்டேன் ஆனால் இயற்கைக் காட்சிகளைக் காணும் போது என் மனம் என்னையும் அறியாமல் அந்த இடத்திலேயே இருந்து பார்த்துக் கொண்டு இருக்கத் தோன்றும். திபேத்தியர்கள் குதிரைகளில் சாமான்களை ஏற்றிக் கொண்டு போகும் போது மிக

வும் ரம்மியமாய் இருக்கும். ஆண்களைப் போல் பெண்களும் குதிரை மேல் போகிறார்கள்.

நமக்கு குதிரை ஏறத் தெரியாதே என்னும் ஏக்கம் வரும். கடவுளின் சிருஷ்டியில் எத்தனை விதமான விநோதங்கள், அவைகளைக் கணக்கிட நம்மால் ஆகுமா? இயற்கை சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஒவ்வொருநாட்டிலும் ஒவ்வொரு இடத்திலும்கடவுளின்சிருஷ்டியை ஊன்றிக் கவனிக்கிற பொழுது நம் மூளைக்கே எட்டாத அதிசயத்தைக் காணலாம். நம் நாட்டில் மாதர்கள், ஈர விறகை அடுப்பில் வைத்து ஊதும் போது, நம்மில் அனேகர் பார்த்திருக்கிறோம். இங்கு குளிர்ப் பிரதேசத்தில் கடவுள் என்ன அற்புதமாய் சிருஷ்டித்திருக்கிறார் தெரியுமா? இங்கு ஓர் விதமான மரம் இருக்கிறது. கிட்டத் தட்ட சவுக்கை மரம் போல் நீண்டு உயர்ந்திருக்கும். பச்சை மரத்தை வெட்டி பற்ற வைத்தால் எப்படி எரியும் தெரியுமா? காய்ந்த கட்டைகளைப் போல் திரு திரு வென்று எரியும். இதை இந் நாட்டினர் குளிர் காய்வதற்கும் சமைப்பதற்கும் இந்த மரத்தைத் தான் உபயோகிக்கின்றனர். அத்துடன் மாட்டின் சாணத்தையும் உபயோகிக்கின்றனர்.

இம்மரத்தின் விதைகளில் சிலவற்றை எடுத்து தமிழ் நாட்டுக்கு அனுப்பலாம் என்று கூட நினைத்தேன். இவை உஷ்ணப் பிரதேசத்தில் விளையாது என்றும், இது விளைவதற்கு குறைந்தது 10,000 அடி உயரத்துக்கு மேல் உள்ள மலைச்சரிவுகள் தான் உகந்த இடம் என்றும் நான் கேள்விப் பட்டேன், காண்ட்டாக்கில் இரண்டொரு இந்தியரும் 2, 3 ஐரோப்பியரும் தவிர, மற்றவர்கள் திபேத்தியர்கள். இங்கு ஒரு வாரம் தங்கி பின்னர், சும்பி என்னும் ஊர் நோக்கிச் சென்றேன். சும்பி வழியாகத் தான் லாசாவுக்குப் போக வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கு முன்னால் பெரிய துணிகளில் தங்கள் மந்திரங்களை எழுதி, நீள மூங்கிலில் காற்றில் பறக்க விடுவார்கள். இப்படிச் செய்வதால் பேய், பிசாசு அவர்களை நாடாது என்று நினைக்கிறார்கள். பேய் என்றால் மிகப் பயம்.

இங்குள்ளவர்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது கஷ்டம் தான். இருவரும் நீள சடை வைத்திருப்பார்கள். நீள அங்கி உடுத்திருப்பார்கள். ஆண்களின் முகத்தில் அனேகருக்கு, மீசை தாடி வளர்வது கிடையாது. இருவரின் முகமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கும். சிலர் முழங்கால் வரை பாதரட்சை அணிகிறார்கள். சிக்கிம்இல் இருந்து லாசா

வுக்கு நல்ல ரோடு கிடையாது கரடு முரடானது பாதை. இங்குள்ள அனைவரும் நடந்தே தான் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுகிறார்கள்.

பணக்காரர்கள் குதிரை மேல் செல்லுகிறார்கள். ஓரிடத்தில் இருந்து மற்றோரிடத்திற்குக் குதிரைகளிலும், மாடுகளிலும் சாமான் ஏற்றிக் கொண்டு போகிறார்கள். மிருகங்களை அன்புடன் வளர்ப்பதில் இவர்களுக்கு நிகர் உலகில் யாரும் இருக்க முடியாது. மிக ஏழைகளைத் தவிர மற்றவர்களுக்குச் கொஞ்சம் குதிரைகள் கட்டாயம் இருக்கும். அதைக் கட்டிப் போடுவதே கிடையாது.

குதிரைகள் மலைச் சரிவில் புல் மேய்ந்து கொண்டு இருக்கும். குதிரைக்குச் சொந்தக்காரன் எங்கேயாவது வெளியில் போக வேண்டுமானால், தன் குதிரைகளின் பெயரில் ஒன்றைச் சொல்லிக் கூப்பிட்டால் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் எஜமானனின் குரலைக் கேட்டவுடன் ஓடி வரும். அதன் மேல் சேணம் வைத்துப் போக வேண்டிய இடத்திற்குப் போய் விட்டுத் திரும்பி வந்தவுடன் சேணத்தை அவிழ்த்துக் கொண்டு, குதிரையைத் தட்டிக் கொடுத்து அதன் முகத்தோடு தன் முகத்தை வைத்து அன்பாக அதைத் தடவிக் கொண்டே என்னமோ அவன் பாஷையில் சொல்லுவான். குதிரை பறந்தோடி மற்ற குதிரைகளுடன் சேர்ந்து கொள்ளும். இதைப் பார்த்த நான் என்ன சொல்வது. தமிழ் நாடே, உன் மக்கள் இப்படித் தான் மிருகங்களை வளர்க்கிறார்களோ என்று எனக்குள்ளே கேட்டுக் கொள்வேன். இங்குக் குளிர் அதிகம் என்னிடம் இருந்த கம்பளிச் சட்டைகள் போதாமல் சும்பியில் வேறு கம்பளி உடைகள் வாங்கினேன். சில சமயங்களில் உரைந்த பனிகளில் நாட் கணக்காய் நடக்க வேண்டி வரும். காலில் எவ் வளவு தடிப்பான மேஜோடு போட்டு பூட்ஸ் போட்டாலும், குளிர் காலைக் கடிக்கும்,

சில சமயங்களில் பல் கூட தேய்க்க முடியாது. தண்ணீரில் கை வெக்க முடிந்தால் தானே! கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 16,000 அடி உயரத்தில் நான் யாத்திரை செய்ய வேண்டி வந்தது. காண்டாக்கிலிருந்து லாசா வர 21 நாள் ஆயிற்று. லாசா, அவ் வளவு பெரிய ஊர் என்று சொல்ல முடியாது. எல்லா வீடுகளும், மரங்களால் கட்டப் பட்டவை. கூறை கூடப் பலகையால் செய்யப் பட்டவைகளே.

அநேக புத்த கோயில் இருக்கிறது. இந் நகரத்தைச் சுற்றி வெண்மையான பனி மலைகளைப் பார்க்கலாம், பஞ்சைப் போல் வெண் சிகரத்தில் சூரிய ஒளி சில சமயங்களில் படும் போது அதன் அழகை வர்ணிக்க ஆயிரம் நாவுப படைத்தவனாலும் முடியாது. அவ்வளவு அழகாய்த் தெரியும்! திடீரென்று மூடுபனி எங்கிருந்தோ ஓடி வந்து சூரியனையும் மலைகளையும் அப்படியே மூடிக் கொள்ளும். இங்கு ஒரு வியாபாரி இருந்தார். அவருக்கு மட்டும் ஆங்கிலம் தெரியும். அவரை நான் கண்டு என் வருகையைத் தெரிவித்தேன். அவர் தங்க இடமும், உணவும் கொடுத்து ஆதரித்தார்.

இவர் ஆட்டு முடியும், இன்னும் சில பொருளும் நேபாளத்திற்கு அனுப்புவதாகச் சொன்னார். பொதுவாகத் திபேத்தியர்கள் நல்லவர்கள் தான்; ஆனால் அவர்கள் பாஷை எனக்குத் தெரியாததால் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டது. லாசாவிலிருந்து மங்கோலியா போக வேண்டும் என்று இருந்தேன். ஆனால் போதுமான பணம் என்னிடம் இல்லலததால். அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். லாசாவில் 5 நாட்கள் தங்கினேன். லாசாவிலிருந்து திரும்பி வரும் போது என்னுடன் 15 வியாபாரிகள் 80 குதிரையில் ஆட்டு முடி ஏற்றிக் கொண்டு வந்தனர். என் சாமானும் அவர்கள் குதிரையில் ஏற்றிக் கொண்டு வந்தனர். அவர்களுடன் நான் வந்ததால் சாப்பாட்டுக்கு கஷ்ட மில்லாமற் போய் விட்டது. ஒரு முறை நாங்கள் மலைச் சரிவில் தெய்வாதீனமாய்த் தப்பினோம். அவர்களுடைய 13 குதிரைகள் சாமானுடன் புதைந்து விட்டது. அடிக்கடி மலை அப்படிச் சரிவதாய் அவர்கள் எனக்குச் சொன்னார்கள். சில நாள் கழித்து மறுபடியும் காண்டாக் வந்து சேர்ந்தேன். இங்கிருந்து நான் லாசா போய்த் திரும்ப 2 மாதம் 11 நாள் ஆயிற்று. நான் திஸ்த்தா போய்ச் சேர்ந்த பின்னர் தான் குளித்தேன். நான் குளித்து சுமார் 2 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. திஸ்த்தா வங்காள மாகாணத்தைச் சேர்ந்தது.

நான் திஸ்த்தா வந்த போது, காலிங்பாங்கில் கவியரசர் ரவீந்தர நாத் தாகூர் இருப்பதாய் கேள்விப்பட்டு, மறுபடியும் காலிங்பாங் சென்றேன். கவியரசர் இருந்த இடத்திற்குச் சென்று அவரின் காரியதரிசிடம் என் எண்ணத்தைத் தெரிவித்தேன். அவர், பாபு யாரையும் பார்க்கக் கூடாது, அதிகம் உடலை அலட்டிக்கக் கூடாது என்று டாக்டரின் உத்தரவு. இருந்தாலும் உங்கள் வருகையைப் பற்றி, அவருக்கு அறிவிக்கிறேன் என்று சொல்லி, உட் சென்று

சிறிது நேரம் கழித்து வந்தார். அவர் சிரித்த முகத்துடன் உங்கள் அதிர்ஷ்டம் அனுமதி கிடைத்தது என்று சொல்லி, என்னை உள்ளே அழைத்துக் சென்றார். தாகூரிடம் பல விஷயங்கள் கேட்க வேண்டும் என்று இருந்தேன். ஆனால் தாகூரைப் பார்த்த ஆனந்தத்தில் என் நாவிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. இரு கைகளையும் கூப்பி அப்படியே கற்சிலை போல் இருந்தேன். ஓர் சாய்வான நாற்காலியில் சாய்ந்திருந்தார். கருப்பு நீள அங்கியும், வெண் பனியைப் போலுள்ள அவர் தாடியும், தலை முடியும், மிக அழகிய அவர் முகமும் அப்படியே கவர்ந்தது. அவர் மெல்லிய குரலில் என்னை உட்காரும்படி சொன்னார்.

நான் அவரின் இடது புறத்திலிருந்த ஓர் சிறு ஸ்டூலில் உட்கார்ந்தேன். அவர் தன் இடது கையால் என் முதுகில் தடவிக் கொடுத்துக் கொண்டு ஆங்கிலத்தில் என் மகனே! உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். நான் என்ன சொல்வது என்று தெரியாமல், உங்கள் ஆசீர்வாதம் தான் வேண்டும், அது இருந்தால் போதும் என்றேன்.

அவர் மகனே! கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார். உன் முயற்சி வெற்றியடையுமாக என்று சொன்னார். என் புத்தகத்தை அவரிடம் நீட்டிய போது அதில் அவர் :

**With blessing**

*Rabindranath Tagore* 21-6-38.

என்று எழுதிக் கொடுத்தார். அவர் அறை மங்கலாக இருந்ததால் நான் அவரை எடுத்த படம் அவ்வளவு தெளிவாக இல்லை. அன்று மதியம் அவர் வீட்டிலேயே சாப்பிட்டேன், காலிங்பாங்கில் A. சக்ரவர்த்தி என்பவர் வீட்டில் ஒருவாரம் தங்கி, கல்கத்தாவை நோக்கிப் புறப்பட்டேன்.

வங்க நாட்டில் பல இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். வங்க நாட்டு மக்கள் எனக்குக் காண்பித்த ஆதரவு எல்லையற்றது. அப்பொழுது என் தமிழ்நாட்டின் பிற்போக்கைப் பற்றி எண்ணி வருந்துவேன். ஆனாலும் அவர்களிடம் என் நாட்டைப் பற்றி பெருமையாகவே சொல்லிக் கொள்வேன்.

## மார்பில் பாம்பு.......?

கல்கத்தாவை நோக்கி வரும் பாதையில் டினுஜபூர் என்னும் இடத்தில் ஓர் தனவந்தர் தோட்டத்தில் என் கூடாரத்தைப் போட்டேன். அவர் மிகவும் நல்லவர். அவர் வீட்டில் படுக்கும்படிச் சொன்னுர். காரணம் அந்தத் தோட்டத்தில் பாம்புகள் அதிகம் நான் அவரைப் பார்த்து, நான் பெரிய மலை, வனுந்திரம் யாவற்றையும் சுற்றி வந்துள்ளேன். பாம்புக்கு பயப்படமாட்டேன் என்று கூறி என் கூடாரத்தில் படுத்தேன். உள்ளுக்குள் பயந்தான். பாம்பு வந்தால் என்ன செய்வது என்று எண்ணி நீண்ட நேரம் தூங்காமலேயே இருந்தேன். பின் எப்படியோ தூங்கிவிட்டேன். நடுஜாமத்தில் திடீரென்று கனவு கண்டு விழித்தேன். என் நெஞ்சில் வட்டமாகக் கனமாக ஏதோ ஒரு பொருள் இருப்பதை உணர்ந்தேன். அது நான் போர்த்திருந்த கம்பளிக்கு மேல் இருந்தது. பயத்தில் சத்தம் போட முடியவில்லை, அசைந்தால் கண்டிப்பாய் பாம்பு என்னைக் கடிக்கும்; என்ன செய்வேன்! பாம்புதானு என்று தொட்டுப் பார்க்க ஆவல் கொண்டு வலது கையை மெதுவாகக் கம்பளிக்குள்ளிருந்து வெளியே எடுத்து ஆள்காட்டி விரலினுல் தொட்டுப் பார்த்தேன். ஜில்லென்று இருந்தது, உடனே கையை இழுத்துக் கொண்டேன். கொஞ்ச நேரம் யோசனை செய்த பின் பாம்பை கம்பளியோடு சுற்றிக் கூடாரத்திற்குள் போட்டு விட்டு வெளியில் வந்து ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் பாம்பு! பாம்பு!! உதவிக்கு வாருங்கள் என்று கூவினேன். அந்த வீட்டுக் கனவானும், மற்றவர்களும் டார்ச் லைட்டும், லாந்தரும், தடிகளுடன் ஓடிவந்தனர். அவர்களிடம் பாம்பு கூடாரத்திற்குள் கம்பளியில் இருப்பதாய்ச் சொன்னேன். கூடாரத்திற்குள் ஆள் நிற்க முடியாது. ஆகையால் கூடாரத்தை அப்படியே தூக்கிவிட்டனர். கம்பளிக்குள்ளிருந்த பாம்பை எல்லோருமாய்ச் சேர்ந்து நன்ருக அடித்தனர். அதில் ஒருவர் பாம்பு செத்துப்போயிருக்கும். என்ன பாம்பு பார்க்கலாமென்று நீளக்கொம்பு ஒன்றில் கம்பளியை மெதுவாக விரித்தார். ஹா! என்ன சொல்வேன்! ஒரு அங்குலம் தடிப்பமுள்ள ஓர் கயிறு சுருள் உள்ளிருந்தது. அதைப் பார்த்த யாவரும் சிரிக்க ஆரம்பித்தனர். பாம்பு எங்கே என்று கேட்டனர். கயிற்றைக் காண்பித்தேன். கூடாரம் கட்ட வைத்திருந்த கயிறு சுருளில் அதுவும் ஒன்று! சில நாள் கழித்து ராஜ்ஷாஹி வந்து சேர்ந்தேன். ராஜஷாஹி காலேஜில் B. A. வகுப்பாருக்குப் பரீட்சை நடந்து கொண்டிருந்தது, நான்

காலேஜ் பிரின்ஸ்பாலைப் பார்த்து என் வரவை அவருக்கு அறிவித்து இன்று மட்டும் இங்கு தங்கி உங்கள் மாணவர்களுக்கு என் அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்று சொன்னேன். உடனே அவர் மாணவர்களுக்கு அன்று மாலை அங்கு ஒரு கூட்டம் நடக்குமென்றும், யாவரும் தவறாது வரவேண்டும் என்று அறிவித்துவிட்டார். இதைப்போல் பல தடவை வங்க நாட்டில் நடந்துள்ளது தமிழ் நாடோ! நினைத்தாலும் பயமாய் இருக்கிறது. நான் பல கல்லூரிகளுக்கு என் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்பி பேச சந்தர்ப்பமளிக்கும்படி கேட்டதற்கு நூற்றுக்குத் தொண்ணூறு இடங்களிலிருந்து; "வருந்துகிறோம்" என்று பதில் வந்தன. (தமிழ் நாட்டைப் பற்றி தனியாகத்தான் புஸ்தகங்கள் எழுதவேண்டும்! பிறகு பல நகரங்களின் வழியாக கல்கத்தா வந்தேன்.



விக்டோரியா மெமோரியல், கல்கத்தா.

இங்கு வங்க நாட்டுச் சிங்கம் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை நேரில் போய்ப் பார்த்தேன். (தமிழ் நாட்டுத் தலைவர்களைப் பார்ப்பது குதிரைக் கொம்புதான்.) நான் எதிர் பார்த்ததைவிட அதிகமாக அவர் அன்புடன் என்னிடம் பேசி என் புத்தகத்தில்;—

Best wishes for Mr. D. K. Rajagopal
who is now on a Tour

382, Elgin Road,
CALCUTTA.
14-9-38

Subbash Chandra Bose

என்று எழுதிக் கொடுந்தார். கல்கத்தாவில் சில நாள் தங்கி எல்லா உயர்தரப் பள்ளியிலும், கலாசாலைகளிலும் சொற்பொழிவாற்றினேன். கல்கத்தாவில் சில நாள் தங்கி டாக்கா வழியாகச் சிட்டகாங் வந்தேன். இங்கிருந்து பர்மாவுக்குப் போகத் திட்டமிட்டு கடற்கரையோரமாகக் காக்ஸ் பஜார் என்னும் ஊருக்கு வந்தேன்.

பொதுவாக வங்காளத்தில் எனக்கு நல்ல ஆதரவு கிடைத்தது, தமிழ்நாட்டுத் தலைமை ஆசிரியர்களைப் போல் அடுத்த வாரம் வா. அல்லது அடுத்த மாதம் வா என்று சொல்லாமல், எனக்கு அவர்கள் பள்ளியில் உடனே பேசச் சந்தர்ப்பம் கொடுத்தனர். நான், என் செலவுக்குப் படங்கள் விற்பதும், நானுகச் செய்த காலண்டர் விற்பதும், சில பள்ளிக்கூடத்தில் பொருள் உதவி பெற்று என் யாத்திரையை நடத்தினேன். அடிக்கடி என் தமிழ் நாட்டின் பிற்போக்கைப்பற்றி நினைத்து வருத்தப்படுவேன். ஆனாலும் அவர்களிடம் பெருமையாகத்தான் சொல்வேன். காக்ஸ் பஜார் வரை வங்காள மாகாணத்தைச் சேர்ந்தது. என்னுடைய கடைசி பேச்சு காக்ஸ் பஜாரில் நடந்தது. அங்கிருந்து உக்கியா என்னும் இடத்திற்கு வந்தேன்.

## அத்தியாயம். 14

### பர்மாவில் என் யாத்திரை

உக்கியாவிலிருந்து மவுண்டோ வந்து சேர்ந்தேன், பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் நடுவிலுள்ள ஊர். பர்மாவின் எல்லை இங்கு வந்தவுடன் வழக்கம்போல், போலீஸ் ஸ்டேஷனில் போய் என் வருகையைத் தெரிவித்தேன். போலீஸ் அதிகாரி, என் உடைவாளுக்கும், என் சிறு கத்திக்கும் லைசன்ஸ் வாங்க வேண்டுமென்று தெரிவித்தார்! இந்த ஊர் அக்கியாப் ஜில்லாவில் இருப்பதால், என் ஆயுதத்தைப் போலீஸாரிடம் ஒப்படைத்து விட்டு, அக்கியாப் சென்றேன். இங்கு சில வங்காளிகள் எனக்கு நல்ல ஆதரவு காண்

பித்தனர், அக்கியாபில் உள்ள மாஜிஸ்டிரேட் எனக்கு உடனே லைசன்ஸ் கொடுத்துவிட்டார். மறுபடியும், மவுண்டோ வந்து என் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பளட்டுவா என்னும் ஊரை நோக்கிச் சென்றேன். பளட்டுவா. அரக்கான்யோமா என்னும் மலைப் பிரதேசத்தின் தலைநகரம். இதையும் சீன் மலைப்பிரதேசத்தையும் தாண்டினால், பர்மாவின் மத்தியிலுள்ள மாண்டலே என்னும் நகரத்தை அடையலாம். ஆனால், மவுண்டோவுக்கும் மாண்டலேக்கும் நடுவில் பாதையோ அல்லது மனிதப் போக்குவரத்தோ கிடையாது. எல்லாம் காடுகளும் மலைகளும் தான். இந்த மலைப் பிரதேசத்தில் மலை ஜாதியார் வசிப்பதாய்க் கேள்விப்பட்டுள்ளேன். ஆகையால் எப்படியும் இந்த மலைகளைத் தாண்டிப் போக முடியும் என்று நம்பினேன்.

மவுண்டோவிலிருந்து 14 நாள் கழித்து. பளட்டுவா வந்தேன். பல பெரிய மலைகளை ஏறி இறங்க வேண்டியதாய் இருந்தது. என் கூடாரத்தை அந்த மலை ஜாதியினருக்குத் கொடுத்துவிட்டேன். பளட்டுவா சிறிய ஊர். இங்கு நான் தங்கி, மலைப்பிரதேசத்தின் அதிகாரியைக் கண்டேன். இவர், சீன் மலைப்பிரதேசத்தின் வழியாய் போகக்கூடாது என்று தடுத்துவிட்டார். காரணம், இப்பகுதியில் உள்ளவர்கள் மிகவும் முரடர்கள். அதுவுமின்றி அவர்கள் அன்னி



மலை ஜாதியினர், அரக்கான்யோமா

யர்களைக் கொலை செய்து விடுவார்கள். ஆகையால் நான் வேறு பாதை வழியாகப் போகத் திட்டமிட்டேன். இப்பகுதியில் பெண்கள் முழங்காலுக்கு மேல் இடுப்பு வரை ஓர் துண்டை உடுத்தியிருப்பார்கள். 4, அல்லது 5 வீடு சேர்ந்தது ஒரு கிராமம். நம்மைப்போல் சாதம் சாப்பிட்டாலும், பதார்த்தத்தில் வெங்காயம், சீரகம், மஞ்சள், புளி, எண்ணெய் முதலியவற்றைச் சேர்க்காமல் வேக வைத்த கீரை, காய் முதலியவற்றுடன் மீனிலிருந்து செய்யப்பட்ட நப்பி என்னும் ஓர் பொருளைச் சேர்த்து சாப்பிடுகிறார்கள். ஆகையால், எனக்குச் சாப்பாட்டுக்கு அதிகக் கஷ்டம் ஏற்பட்டது. சுமார் $1\frac{1}{2}$ மாதம் வரை நான் தண்ணீர் கலந்த சாதத்தைச் சாப்பிட நேர்ந்தது. ஒரு கிராமத்திலிருந்து மற்ற கிராமத்திற்கு ஒருநாள் தொலைவு முதல் ஐந்து நாள் தொலைவு வரை இருக்கும். நான் மூன்று மாதம் வரை இப்பிரதேசத்தில் சுற்றி அந்த ஜனங்களோடு பழகினேன். எனக்கு அவர்கள் பாஷை தெரியாவிட்டாலும் ஊமைபோல் ஜாடை காண்பித்து எனக்குத் தேவையானவற்றை அவர்களிடம் வாங்குவேன். இங்கும் நான் அதிகக் கஷ்டப்பட்டேன். பலமுறை காட்டில் இரவைக் கழிக்க வேண்டி யிருந்தது. ஒருநாள் என் பையில் தண்ணீர் ஆகிவிட்டதாலும், சமீபத்தில் தண்ணீர் இல்லாததாலும், அன்றிரவு முழுவதும் கழித்து, மறுநாள் காலை மூங்கில் இலைகளின் மேல் முத்துபோலிருந்து பனிநீரை நக்கி, நக்கி என் தாகத்தைப் போக்கினேன்.

என்னைக் கண்டவுடன், அந்த ஜனங்கள் வீட்டை விட்டு ஓடி விடுவார்கள். நான் கையைக் காண்பித்த அவர்களை வரும்படி சொல்வதுண்டு.

## அத்தியாயம். 15

### "கரடியுடன் போர்!"

ஒருநாள் மலையிலிருந்து ஒற்றையடிப்பாதை வழியாக இறங்கிக் கொண்டிருந்தேன். என் இருபுறமும் அடர்ந்த காடு. காய்ந்த மூங்கில் இலைமேல் நான் நடப்பதைத் தவிர வேறு சத்தம் கிடையாது. சுமார் 10 அல்லது 11 மணி யிருக்கும். என் பின்னால் யாரோ நடப்பதுபோல் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். சுமார் 15 கெஜ தூரத்தில் ஓர் பெரிய கரடி வந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட நான், இதனிடமிருந்து தப்ப அதிவேகமாய்

இறங்கினேன், கொஞ்சதூரம் சென்ற பின் பின்னல் வந்து கொண்டிருந்த கரடியைப் பார்த்தபோது, அது காணவில்லை. இன்னும் கொஞ்சதூரம் போனபேர்து என் முன்னல் அதைப்போல் ஒரு கரடியைக் கண்டு நான் திடுக்கிட்டேன். வந்த பாதையை நோக்கி மலையில் ஏறினேன். முன்பு பார்த்த அதே இடத்தில் கரடி இருக்கிறது. ஆனல் ஒரு வித்தியாசம். முன்பு நாலு காலில் நின்று கொண்டிருந்தது. இப்பொழுதோ இரண்டு காலில் நின்றுகொண்டு உறுமிற்று. அதன் நெஞ்சில் (V)யை போல் வெள்ளைக் கோடு. என்னிடம் பெரிய வாள் இருந்தும் பயத்தில் உடல் நடுங்க ஆரம்பித்தது. மறுபடியும் கீழ்நோக்கி வந்தேன். இங்கும் முன்பு பார்த்த இடத்தில் இதைப்போல் இரண்டு காலில் நின்று கொண்டு உறுமிற்று. நான் இருதலைக் கொள்ளியிற் அகப்பட்ட எறும்புபோல் என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். ஆனல் கரடியோ என்னை நோக்கி மெதுவாக வருவதும் நிற்பதுமாயிருந்தது. நான் இருந்த அந்நிலையை விவரித்து எழுத எனக்குத் திறன் இல்லை. நான் கடைசியாக ஓர் முடிவுக்கு வந்தேன். ஒன்று நான் அதனிடம் அகப்பட்டுச் சாகவேண்டும். அல்லது அதனுடன் சண்டை போட்டு ஜெயிக்கவேண்டும், உயிர் எல்லாருக்கும் அருமை. இக்காட்டில் நான் தோற்ருல், என் பிணத்தைக் காட்டு மிருகங்கள் தின்னும். இதை நான் நினைத்தபோது என் மனதில் ஓர் வித போர்க் குணமும், தைரியமும் ஏற்பட்டது. என் முதுகில் இருந்த மூட்டையைக் கீழே போட்டுவிட்டு வாளை உருவினேன்.

கரடியும் கொஞ்சங் கொஞ்சமாக என்னை நெருங்கிவிட்டது. என் கையால் என் தொப்பியை எடுத்து. வாளைத் தயாராக வைத்திருந்தேன். கரடி என் சமீபத்தில் வந்துவிட்டது. என் இடது கையிலிருந்த தொப்பியை அதனிடம் நீட்டியவுடன், தன் இரு முன்னங் கால்களால் தாவிப் பிடித்தவுடன் நான் அதன் வயிற்றில் குத்தினேன். அது தொப்பியை போட்டுவிட்டு கத்தியைப் பிடித்தது. அதன் வயிற்றிலிருந்த கத்தியை உருவிப் பலமுறை அதைக் குத்துவதும், பக்கவாட்டில் வெட்டுவதுமாய் இருந்தேன். இப்படி சுமார் எனக்கும் கரடிக்கும் 2 மணி நேரம் போர் நடந்தது. என் கை, உடையெல்லாம் ரத்தம்! அது என்னை அறைந்தபோது இடது கையால் என் பலம் கொண்ட வரை தட்டிவிட்டேன், ஆயினும் அதன் நகம் என் இடது உதட்டின் சமீபத்தில் பட்டதால் $\frac{1}{2}$ அங்குலத்திற்குக் கிழிந்துவிட்டது. (நான் ஓர் கதாசிரியராக இருந்

தால் இவ்விபற்தை மிகவும் அழகாக எழுதி யிருக்கக்கூடும். நான் ஓர் யாத்ரீகன்! அதுவுமல்லாமல் அழகாக எழுதும் திறமையும் இடையாது!)

கடைசியில் கரடி என் முன்னல் நிற்க முடியாமல் கத்திக் கொண்டு ஓடிற்று. நான் என் மையியிலிருந்த ரத்தத்தை இலைகளில் துடைத்துவிட்டு, என் பையை முதுகில் மாட்டிக்கொண்டு அது போன பாதையாகவே போனேன். பாதையிலிருந்து இடது பக்கம் வேறு பாதை வழியாகக் கரடி போயிற்று.

கொஞ்சதூரம் போனவுடன் அது கீழே விழுந்துவிட்டது. புதரில் இருந்த ஓர் கரடிக்குட்டி, ஒரு சாண் உயரம் இருக்கும் பெரிய கரடியின் சமீபத்தில் வந்து கத்தியது. அதைப் பார்த்த வுடன் எனக்குப் பரிதாபமாய் விட்டது. நான் பெரிய கரடி இறந்துவிட்டதா என்று பார்க்க, சமீபத்தில் இருந்த கல்லை எடுத் துப் போட்டேன். அது அசையாமல் இருந்தது. நான் அதன் சமீ பம்போய் அந்தக் குட்டியை என் இரண்டு கைகளாலும் தூக்கிய போது அது என் கையைக் கடித்துவிட்டது. (அந்த அடையாளம் இன்னும் என் கையில் இருக்கிறது) அதன் முகத்தில் ஒரு அடி கொடுத்து, என் பையிலிருந்த ஒரு துண்டில் அதைப்போட்டு கட் டித் தூக்கிக்கொண்டு என் வழி நடந்தேன். நான் இரண்டு இடத் தில் பார்த்தது இந்த ஒரே கரடிதான் அன்று மாலை ஒரு கிராமத் திற்குப் போய்ச் சேர்ந்தேன்.

குட்டியை நான் பிடித்து, பெரிய காடியை நான் கொன்ற தாய் அவர்களுக்கு ஜாடை காண்பித்தேன். அவர்கள் உடனே மூங் கிலை வெட்டி, ஓர் சிறு கூண்டு செய்து அதில் குட்டியை விட்டு விட்டார்கள். கரடியை குத்திய இடத்திற்கு என்னைக் கூப்பிட்டார் கள். நான் கால் வலிப்பதாய் அவர்களுக்கு ஜாடை காண்பித்தேன். அவர்கள் என்னை விடவில்லை பெரிய மூங்கில் எடுத்து, தொட்டில் செய்து அதில் என்னை உட்கார வைத்து, 4 பேர் தூக்கிக்கொண்டு போனார்கள். நாங்கள் கரடி இருந்த இடத்திற்குப் போய்ச சேரு வதற்குள் இருட்டிவிட்டது. வெளிச்சத்திற்கு மூங்கிலை எரித்துக் கொண்டு வந்தார்கள். கரடியைக் கண்டவுடன் அவர்களுக்குப் பேரானந்தம் கரடியின் முன்னங் கால்களையும், பின்னங் கால்களை யும் கட்டித தூக்கிக்கொண்டு கிராமத்திற்கு வந்தோம். கிராமத்தி லிருந்தவர்கள் கரடியைக் கண்டவுடன், என்னைக் கட்டிப் பிடித்த

னர். ஏன் அவர்களுக்கு அவ்வளவு ஆனந்தம் என்று தெரியவில்லை. கரடியின் தோலை உரித்து அதன் மாமிசத்தை எல்லாரும் பங்கு போட்டுக்கொண்டார்கள். எனக்கும் ஒரு பங்கு தந்தனர். நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

அந்தக் கிராமத்தில் இரண்டு நாள் தங்கி, துணிகளிலிருந்த இரத்தம் எல்லாம் போக துவைத்து அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு சிலநாள் கழித்து, மின்பு' என்னும் ஊருக்கு வந்தேன். நான் கரடியைக் கொன்றது இங்கு எப்படியோ நான் வருவதற்கு முன் தெரிந்துவிட்டது பர்மிய பத்திரிகைகளும், ஆங்கிலப் பத்திரிகைகளும், தமிழ்ப் பத்திரிகைகளும் "யோமா பர்வதத்தில் கரடியுடன் போர்" என்னும் தலைப்பு கொடுத்து எழுதியிருந்தது.

பல நகரங்களைத் தாண்டி 'மக்வே' என்னும் ஊருக்கு வந்தேன். அதிக வெய்யில் காலமாயிருந்ததாலும், என்னுடைய எல்லாச் சாமான்களுடன் கரடி குட்டியையும் தூக்கிச் செல்வது அதிகக் கஷ்டமாய் இருந்தது. அது சிறு குட்டியாய் இருந்ததினால் அதிக தூரம் அறனல் நடக்க முடியவில்லை. ஆகையால், மகவேயில் இருந்த திரு L. B. தாஸ் உதவி ஜெயில் அதிகாரிக்கு என் ஞாபகார்த்தமாக கொடுத்து விட்டேன். மக்வேயிலிருந்து மிக்டில்லா, தாஜி, என்னும் பல ஊர்கள் வழியாக கல்லோ என்ற இடத்திற்கு வந்தேன். பர்மாவில் உள்ள மூன்று கோடை ஸ்தலத்தில் கல்லோவும் ஒன்று.

இங்கு சில நாள் தங்கி டவுன்ஜி என்னும் ஊருக்குப் புறப்பட்டேன். வழியில் ஹீஹோ என்னும் இடத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் எஞ்ஷுவே என்னும் ஊர் இருக்கிறது. இது மிகவும் விசித்திரமான இடம். இங்கு ஓர் பெரிய ஏரி இருக்கிறது. வீடுகள் எல்லாம் தண்ணீருக்கு மேல் கட்டப்பட்டிருக்கும். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக வேண்டுமானல் படகில்தான் போகவேண்டும், படகும் நம் நாட்டைப் போலில்லாமல் குறுகி நீளமாக இருக்கும். படகோட்டி நம் நாட்டைப்போல் படகின் துடுப்பைக் கையால் தள்ளாமல் படகின் ஓர் முனையில் நின்றுகொண்டு படகின் துடுப்பை காலால் தள்ளுவது பிறநாட்டு மக்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். வருடா வருடம், படகு ஓட்டுவதில் இவர்களுக்குள் பந்தயம் என்று கேள்விப்பட்டேன். (74-ஆம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்)

இதைப் பார்த்தபின் டவுன்ஜி என்னும் இடத்தில் போய் நோடைக்காலத்தைக் கழித்தேன். டவுன்ஜியில் இருந்து சிப்போ,



படகின் துடுப்பைக் காலினுல் தள்ளுதல்.



காட்டிலுள்ள பாழடைந்த புத்தர் கோவில்.

லாஷோ, நம்டு, மெய்மியோ முதலிய இடங்களைப் பார்த்துக் கொண்டு மாண்டலே வந்தேன். இது பர்மாவின் இரண்டாவது

பெரிய நகரம். பெரியதோர் கோட்டையும், அதை சுற்றி ஓர் பெரிய அகழியும் இருக்கிறது. பர்மாவை ஆண்ட பல அரசர்கள் இருந்த இடம். இதன் சமீபத்தில் ஓர் குன்றும், அதன்மேல் ஓர் புத்த கோவிலும் உள்ளது. அந்த மலையில் ஒரே தேக்கு மரத்தில் செய்யப்பட்ட ஓர் புத்த சிலையும் உண்டு. பர்மாவின் கடைசி அரசனான தீபோ மன்னன், 1885-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 26-ஆம் தேதி தன் அரண்மனையின் வெளியில் சரணாகதி அடைந்ததாக சரித்திரம் சொல்லுகிறது. இது சம்பந்தமாக, ஓர் கல் நாட்டப்பட்டிருக்கிறது அன்றி அரண்மனையின் வெளிப்புறத்தில் அரசனின் சமாதியும் இன்னும் பார்க்க வேண்டிய பல அரிய பொருள்களும் உள்ளது. 24-ஆம் பக்கத்திலுள்ள படத்தை பார்க்கவும்.

இந்நகருக்குப் பக்கத்தில் பர்மாவின் மிகப் பெரிய நதியாகிய ஐராவதி என்னும் நதி ஓடுகிறது அக்கரையில் அமர்புரா என்னும் ஓர் புராதன நகரம் உண்டு, அதற்குப் பக்கத்தில் சகாயின் என்னும் ஓர் இடம் உண்டு. இவை யாவும் சரித்திர பிரசித்தியுள்ள இடம், கள். இங்கு பட்டுத்துணிக்கும், குடைக்கும் மிகப்பேர் பெற்ற இடம். பக்கத்திலுள்ள அடர்ந்த காட்டினுள் அழகிய பல பாறடைந்த புத்தக் கோவில்கள் உண்டு. (74-ஆம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்) இவை யாவும் பார்த்தபின், இரங்கூனை நோக்கி புறப்பட்டேன்,

வழியில் பல நகரங்களைப் பார்த்துக்கொண்டு பெகு என்னும் ஊருக்கு வந்தேன். இது இரங்கூனிலிருந்து 45 மைல் தூரத்தில் இருக்கிறது. பாழடைந்த பல கோட்டைகளும், கோவில்களும் உள்ள இடம். இங்குள்ள ஓர் மலைச் சாரலில் இரண்டு கல் தூண்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதில் இந்திய மூல பாஷையில் எழுதப்பட்ட சாசனத்தின் பேரில் இந்தியருக்கும் பர்மியருக்கும் பல முறை சண்டைகள் நடந்திருக்கிறது. அந்த சாசனத்தில் இந்திய மொகலாய சக்ரவர்த்தி பர்மாவைப் பிடித்து ஆண்டதாக இந்தியர்கள் வாதாடுகிறார்கள். பர்மியர்கள் உங்கள் மொகலாயர் பர்மாவுக்கு விஜயம் செய்ததை யொட்டி, ஞாபகார்த்தமாக இக்கல்தூண் இங்கு வைக்கப்பட்டது என்று வாதிக்கிறார்கள். இப்பொழுது அது ஜில்லாக் கோர்ட் கம்பவுண்டில் இருக்கிறது. இங்கு ஓர் சிறு ஆறும் ஓடுகிறது. அதற்கு "பெகு ஆறு" என்று பெயர். பெரும்பாலான போக்குவரத்து இதன் மூலம் நடைபெறுகிறது. இங்கு 180 அடி நீளமுள்ள படுத்திருக்கும் பாவனையில் ஓர் புத்த சிலை இருக்கிறது.

அதன் பாதத்தில் ஆதிகாலத்தில் பர்பாவின் விலையுயர்ந்த கற்கள் அமைத்திருந்தார்கள். பின்னர் பர்மாவைப் பிடித்த அன்னியர்கள் அந்தக் கற்களை எடுத்துவிட்டு அதற்கு பதில் கண்ணாடிகளையும் போலி கற்களையும் வைத்ததாக சரித்திரம் சொல்லுகிறது. அதன் இடது புஜத்திலிருந்து வலது புஜம் வரை 35 அடி இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த புத்தர் சிலையை தலை முதல் கால் வரை ஒரே படமாக எடுக்க எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் யாவும் வீணாய்விட்டது. ஆகையால் அதன் தலையும் காலுமாக இரண்டு படம் எடுத்தேன். அதன் தலைப்பக்கத்தை (24-ஆம் பக்கத்திலுள்ள படத்தில் பார்க்கவும்.)

பெகுவிலிருந்து இரங்கூன் வந்து சேர்ந்தேன். இது பர்மாவின் தலைநகரம். நவீன முறையில் அமைக்கப்பட்ட ஓர் நகரம். மிகவும் சுத்தமாயும் தெருக்கள் எல்லாம் ஒரே நேராகவும் அமைக்கப்பட்டிருககிறது. நம் நாட்டில் ஓர் தெருவின் பெயரைச் சொல்லிக்கொண்டு அலைவதைப்போல் அலையவேண்டாம். தெருக்களுக்கு வரிசைக்கிரமமாக 1 முதல் 300-க்கு அதிகமாக எண்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அங்கு தெருவைக் கண்டு பிடிப்பது மிகச் சுலபம். நகரத்தின் எல்லைக்குள் டிராலி, டிராம், ரிக்ஷா, குதிரை வண்டி, டாக்சி, (சைக்கா) டிரைஷா முதலிய போக்குவரத்து வசதிகள் அமைந்திருக்கிறது. மிகப் பிரசித்திபெற்ற புத்தர் கோவில் உள்ள இடம் மிக முக்கியமான 3, புத்தர் கோவில்கள் இந்த நகரத்தில் இருக்கிறது. 1 ஷிவேடகான் பெகோடா, 2. சூலைப் பெகோடா, 3. நாட்டாஜி பையா இந்த மூன்றும் மிகப் பிரசித்திப் பெற்றவை. ஷிவேடகான் பையா (கோவில்) பற்றி தனியாக எழுதினால் அதுவே குறைந்தது 40 பக்கத்திற்கு வந்துவிடும். ஆகையால் அதை விட்டுவிடுகிறேன். இக் கோவில் அடியிலிருந்து நுனிவரை தங்கத் தகட்டால் மூடப்பட்டிருக்கிறது. இரங்கூனில் பல சங்கங்களிலும், பள்ளிகளிலும், இரங்கூன் யூனிவர்சிட்டியிலும் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. நம் நாட்டில் ஆண்களோடு பெண்கள் சேர்ந்து படித்தால் கெட்டுப்போவார்கள் என்று சொல்பவர்கள் இங்குள்ள மெயோமா H. E. ஸ்கூலைப்பற்றி அறிந்துகொள்வது அவசியம். இங்கு ஆண்களும் பெண்களும் சேர்ந்தே சிறு வகுப்பு முதல் மேல் வகுப்பு வரை படிக்கிறார்கள். அவர்களை நான் சந்தித்து பல விஷயங்களை அறிந்துகொண்டேன். அவர்களுக்குள் அன்னியோன்னியம், அன்பு, ஒற்றுமை, அதிகமாக வளர்ந்திருக்கிறது. ஆண்களைப்போல் பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்

னேறி இருக்கிறார்கள். இந்நாட்டு படித்த பெண்களைப்போல் உதட்டில் லிப்ஸ்டிக் முகத்தில் பவுடர், ஹீல்வைத்த ஷூவுடன் வீட்டு நிர்வாகம் தெரியாமல் இருப்பதைப்போல் இல்லாமல் வீட்டு வேலைகளிலும், குழந்தை வளர்ப்பதிலும் தங்களுக்குத் தேவையான யாவும் தாங்களே செய்யக்கூடிய விதத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு இஸ்திரி பெட்டி இருக்கும். தங்கள் துணிகளைத் தாங்களே துவைத்து அதை இஸ்திரி பண்ணுகிறார்கள். சமீபத்தில் நான் ஒரு வீட்டிற்கு விருந்துண்ணப் போயிருந்தேன். அவர்கள் வீட்டு எஜமானியைப்பற்றி, அவர் கணவன் என்னிடம் சொன்னபோது எனக்கு வருத்தமாக இருந்தது.

பர்மியர்கள் பல விதத்தில் முன்னேறி இருக்கிறார்கள். நம் நாட்டு கலைகள் அங்கிருந்தாலும் அவர்களுக்கும் நமக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. நம் நாட்டில் அடிக்கடி நடக்கும் மதச்சண்டை அங்கு கிடையாது தகப்பன் புத்த மதமாக இருக்கலாம், தாய் கிறிஸ்தவளாக இருக்கலாம், மருமகள் முஸ்லீமாக இருக்கலாம் ஆயினும் அவர்களுக்குள் சண்டை கிடையாது. யாவரும் ஒற்றுமையுடன் உணவு அருந்துவார்கள். நம் நாட்டில் ஜாதியும, மதமும் நடுவில் புகுந்து எல்லாவற்றையும் பாழ்படுத்துகிறது. நம் நாட்டில் மேடை மீது பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கூச்சலிடும் ஆண்கள் தங்கள் வீட்டில் பெண்களை அடிமைகளாக வைத்திருப்பதைக் கண்டேன். ஆனல் பர்மாவில் பெண்களுக்குப் பரிபூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை காதலித்து, அவர்களை மணம் செய்யவும் தங்களுக்கு இஷ்டமான வேலைகளைச் செய்யவும் பரிபூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. படித்த ஆண்களும் எந்த வேலை செய்யவும் பின்வாங்கமாட்டார்கள். நம் நாட்டில் கொஞ்சம் படித்தவர்கள் கூட தங்கள் சாமான்களைத் தூக்கக் கூலிக்காரனை எதிர்பார்க்கிறார்கள். தாங்களே செய்யக்கூடிய சிறிய காரியமானலும் பிறர் செய்யும்படி எதிர்பார்ப்பதால் தான் நாம் முன்னேற்ற மடையாமல் இருக்கிறோம்.

பர்மியர்கள் நன்றாய்ச் சாப்பிடுவதிலும், உடுப்பதிலும் தங்களை அலங்காரம் செய்வதிலும், தங்கள் வீட்டை நாகரீக முறையில் வைப்பதிலும் அதிகச் சிரத்தையுடையவர்கள். அழகிய பல வர்ண ஆடைகள் அணிவதிலும் தலை நிறையப் புஷ்பம்அணிவதிலும்அதிக விருப்ப முள்ளவர்கள். நம் நாட்டுப் பெண்களைப் போல் தூக்க முடி



நாட்டாஜி பையா: இரங்கூன்.



ஆடும் புததர் கோயில் .சைட்டோ.

76-ம் பக்கம் பார்க்கவும்.

யாத நகைகளைப் போட விரும்பார்கள். தங்களுக்குள் பல கட்சி இருந்தாலும் அன்னியருக்கு இடம் கொடுப்பதில்லை. அதிக ஒற்றுமையுடையவர்கள். நான் இரங்கூனில் வந்த சில நாளில் சீனாவுக்கு போய் விட்டுத் திரும்பிய இந்திய தேசிய காங்கிரஸின் தலைவரும் இந்தியாவின் முடிசூடா மன்னருமாகிய பண்டித ஜவஹர்லால் நேரு இரங்கூனுக்கு வந்தார்.

இங்கு மேத்தா என்பவர் வீட்டில்தங்கிஇருந்தார். அவரை காண நான் சென்றேன். திரு. மேத்தாவுக்கு என்னைத் தெரியும். அவர் என்னைப் பண்டித நேருவுக்கு அறிமுகம் செய்து வைத்து நான் கரடியைக் கொன்ற விஷயத்தையும் கூறினார், பண்டிதர் அன்புடன்பேசி நான் யாத்திரை செய்யும் நோக்கம் பற்றியும் யாத்திரை செய்து, என்ன செய்யப் போகிறேன் என்பது பற்றியும் எங்கெல்லாம் செல்வேன் என்பது பற்றியும் விவரமாய்க் கேட்டார்.



நானும் பண்டித நேருவும்

நான் யாவும் விவரமாய்க் கூறிய பின் அவரை நான் பார்த்ததற்கு அடையாளமாக அவருடன் சேர்ந்து படம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு அவர் உடனே இசைந்தார். அன்றி என் புத்தகத்தில்: —

*All Good Wishes*

**Jawaharlal Nehru.**

Rangoon. 8th Sept '39

என்று எழுதிக் கொடுத்தார். நான் கீழ் நாட்டில் வெற்றியுடன் யாத்திரை செய்ததற்கு அவரே காரணம் என்று சொல்லலாம். அவருட

னிருந்து எடுத்தப் படத்தினல் ஒருமுறை சீனக் கொலேக்காரனிட மிருந்து தப்பினேன். அன்றி அப்படங்கள் விற்பதின் மூலம் நிதி திரட்டி கஷ்டமின்றி யாத்திரை செய்தேன்.

இரங்கூனில் சில நாள் தங்கி சில ஊர்கள் வழியாக சைட்டோ என்னும் இடத்திற்கு வந்தேன். ஊரிலிருந்து 10 மைல் தூரத்தில் ஒரு மலே இருக்கிறது. அந்த மலேயில் ஓர் பாறை. பாறை மேல் கோழி முட்டை வடிவத்தில் மற்ரொரு பாறை; அதன் மேல் புத்தக் கோவில். இதில் என்ன அதிசயம் என்ருல் காற்றடிந்தாலும், அல்லது கையால் தள்ளினலும் கோழி முட்டை வடிவமுள்ள பாறையும், கோவிலும் ஆடும். ஆனல் கீழே விழாது. வருடா வருடம் இங்கு திருவிழா நடைபெறுகிறது, அதற்கு ஏராளமான யாத்ரீகர்கள் வருவதுண்டு. (78-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்.)

அதைப் பார்த்த பின் மோல்மின் வழியாய் டவாய், முருகி வந்தேன். முருகியில் எனக்குச் சுலபமாக மலாயாவிற்குள் போக அனுமதி கிடைத்தது.

பர்மாவுக்கும், மலாயவுக்கும் நடுவில் சயாமின் எல்லே சேருகிறது. கரா என்னும் ஊர் தான் சயாமின் எல்லேயில் உள்ள ஊர். அதன் வழியாக மலேயாவுக்குப் போக வேண்டும். என் பாதை மோட்டார் போகக்கூடிய பாதையல்ல. ஆனல் மனிதர் போகக் கூடிய பாதை, பல ரப்பர் தோட்டங்கள் வழியாகப் போயிற்று. ஒரு மாதம் கழித்து சிங்கப்பூர் வந்து சேர்ந்தேன். இங்குள்ள இந்தியர்கள் எனக்கு நல்ல ஆதரவு காண்பித்தார்கள். மலேயாவுக்கும், சயாமுக்கும் நல்ல ரயில் பாதை இருக்கிறது. இங்கு மறுபடியும் பாஸ்போர்டுக்கு எழுதிப் போட்டேன். என் அதிர்ஷ்டம் 15 நாட்களுக்குள் கிடைத்து விட்டது. மலாயா, சயாம் இண்டோ சைஞ, சைஞ, ஜப்பான் முதலிய நாட்டில் நான் செய்த யாத்திரையை இச்சிறு நூலில் இடமில்லாததால் விபரமாக எழுத முடியாததற்கு வருந்துகிறேன். (கால் நடையில் எனது சீன யாத்திரை என்னும் புத்தகத்தைப் பார்க்கவும்.) மலேயாவிலிருந்து சயாமின் தலேநகரான பாங்காக் வந்தேன். இங்கும் எனக்கு இந்தியர்கள் நல்ல ஆதரவு காண்பித்தனர். ஆனல் இண்டோ சைஞவில் நான் பாஷை தெரியாததால் அதிகக் கஷ்டப் பட்டேன். ஆங்கிலம் இங்குள்ளவர்களுக்கு 100-த்தில் ஒருவருக்குத் தெரிவது கஷ்டம். அனேவரும் சீன பாஷையும், பிரெஞ்சு பாஷையும் பேசுகிருர்கள் ஆகவே நான் குறுக்குப் பாதை வழியாகச் சீனவுக்குள் புகுந்தேன். அந்தக்

காலத்தில் சீனருக்கும், ஜப்பானியருக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்ததால், அடிக்கடி சீனப் போலீஸார் எனக்குத் தொந்திரவு கொடுத்தனர்.

ஒருவாறு காண்டன், அமோய், வின்சோ வழியாகச் ஷாங்காங் வந்தேன். இங்கிருந்து கடல் மார்க்கமாய் நாகாசக்கி வந்தேன் சீனுவுக்கும், ஜப்பானுக்கும், தரை மார்க்கம் இல்லாததால் நான் கப்பலில் போக வேண்டி வந்தது.

ஜப்பானில் நான் கால் வைத்த துரதிர்ஷ்டமோ என்னவோ ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் சண்டை துவங்கிவிட்டது. நான் நாகாசாக்கியிலிருந்து ஹீரோஷிமா வழியாகக் கோப் வந்தேன். ஏராளமான இந்தியர்கள் இருக்கிறார்கள். எஸ். எம். சென் என்னும் வங்காளியின் விருந்தினராக நான் இருந்தேன். அவர் ஜப்பானிலிருந்து இந்தியாவுக்குச் சாமான் ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார். யுத்தத்தின் காரணமாக அனேக இந்தியர்கள், ஜப்பானை விட்டு இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள். சிலர் அங்கேயே இருந்து விட்டனர். அதில் நானும் ஒருவன். நான் திரு. சென்னின் உதவியால் ஓர் தொழிற்சாலையில் உலோகங்கள் கலத்தலும், வார்ப்படமும் பயின்றேன். என் திறமையைக் கண்டு ஒரு கம்பெனியார் தங்களுக்கு உதவியாக என்னை மறுபடியும் சயாமுக்கு அழைத்து வந்தனர். சயாமிலிருந்து பர்மா வந்தேன். இங்கு ஜப்பானியர்களுக்கும் இந்திய தேசிய ராணுவத்தினருக்கும் யுத்த தளவாடங்களைத் தயாரித்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டேன். பர்மாவிலிருந்த காலத்தில் ஏராளமான பணம் (ஜப்பானிய கரன்ஸி) சம்பாதித்தேன் அவைகளைப் பள்ளிக்கூடங்களுக்கும், நேத்தாஜி நிதிக்கும், விதவைகளுக்கும், மற்றும் பல நல்ல காரியங்களுக்கும் செலவிட்டேன்.

யுத்தம் முடிந்ததும் நான் கரித் தொழிலாளர் சங்க உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆனாலும் என் யாத்திரையின் எண்ணம் மனதை விட்டு அகலவில்லை. மேல் நாடு செல்லும் நோக்கத்துடன் நான் நடத்திவந்த வார்ப்படத் தொழிலை மூடிவிட்டு இந்தியா வந்தேன், எப்படி வெறுங்கையுடன் பர்மாவுக்குப் போனேனோ, அதைப்போல வெறுங்கையாக இந்தியாவுக்கு வந்தேன். இந்திய ஜனங்கள் (தமிழர்கள் எனக்கு) நல்ல ஆதரவு கொடுப்பார்கள் என்று எண்ணினேன். ஆனல் நான் நினைத்தது தவறாய்விட்டது. வறுமையும் பிணியும் நாடிற்று. பலர் என் காரியத்திற்கு ஆதரவு கொடுக்க மறுத்தனர். இருந்தாலும் கடவுள்

ஆசியாவில் நான் யாத்திரை செய்த இடங்கள்.




CONNEMARA PUBLIC LIBRARY 13 JUL 1957 MADRAS

எனக்கு உதவி புரிவார் என்பதே என் எண்ணம் இதுவரை நான் 28,206 மைல்கள் நடந்திருக்கிறேன். இப்புத்தகத்தில் சொல்லிய எல்லாவற்றிற்கும் போதிய ஆதாரம் வைத்துள்ளேன், இதுவரை நான் பார்த்த நாடுகள் இந்தியா இலங்கை மால்தீவு, நேபாளம், பர்மா, சியாம், இந்தோ சீனு, திபேத், சைனு, ஜப்பானில் கொஞ்ச பகுதி.

என் யாத்திரை முடிய இன்னும் 12 வருஷங்கள் பிடிக்கும் என்று நம்புகிறேன். இச்சிறு புத்தகத்தைப் படிக்கும் நீங்கள் பொருளுதவி செய்ய முடியாவிட்டாலும் உங்கள் தியானத்தில் கடவுள் எனக்கு நல்ல சுகத்தையும், பலத்தையும் கொடுக்கும்படி உங்கள் பிரார்த்தனையில் வேண்டிக் கொள்ளும்படி மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்கிறேன். நான் வெற்றியுடன் வந்தால் அந்தப் பெருமை எனக்கல்ல; "நம் தமிழ்நாட்டுக்கு" என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. உலகில் பல யாத்ரீகர்கள் புறப்பட்டனர்; பலர் கொஞ்ச தூரம் போய் நின்றுவிட்டனர்; பலர் மாண்டு மடிந்தந்தர். இதுவரை யாரும் செய்து முடிக்காத இக்காரியத்தை நான் செய்து காட்ட முற்பட்டேன். அன்னிய நாட்டில் இந்தியன், அதுரிம் தமிழன் உலகத்தையே கால் நடையில் சுற்றினுன் என்னும் பெயரை நிலை நாட்டி, வெற்றியுடன் தமிழ்நாடு திரும்ப நீங்கள் ஆசீர்வாதமும் ஆதரவும் அளிக்கும்படி மிகத் தாழ்மையாக வேண்டுகிறேன்.

எல்லோருக்கும் என் வணக்கம்.

முற்றும்.

# பின்னுரை

மறுபடியும் யாத்திரை செய்யவேண்டும் என்னும் எண்ணத்தில், பர்மாவிலிருந்து, சுதந்திர நாட்டுக்கு வந்தேன். ஆனால் சுதந்திர நாடோ! முன்பு இருந்ததற்கு நேர்மாறாக இருப்பதை பார்த்த நான் மேல்நாட்டு யாத்திரையை தற்காலீகமாக நிர்பாட்டி தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பள்ளியாக சென்று பிரதி பலன் ஒன்றும் எதிர்பார்க்காமல் பிறநாட்டின் ஒழுக்கம், கல்வி, கலாசாரம், நான் கண்ட அதிசயங்களை சொல்லிக்கொண்டு வருகிறேன், புத்தகங்கள், படங்கள் விற்பதின் மூலம் கிடைக்கும், பணத்தை என் வழி செலவுக்கு உபயோகப்படுத்துகிறேன். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சேவை செய்ய வேண்டுமென்பதே என் ஆவா. தமிழ் நாட்டில் இன்னும் மூன்று ஜில்லாக்கள் தான் பாக்கி, அந்த ஜில்லாக்களில் என் பிரச்சார வேலை முடிந்தவுடன், வடநாடு வழியாக மேல்நாடு செல்வேன்.

மேல் நாட்டு யாத்திரைக்கு அதிக பொருள் தேவை, மனம் வந்து எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்களும், எனக்கு கடிதம் எழுத விருப்பமுள்ளவர்களும். இரண்டாம் பக்கத்திலுள்ள விலாசத்திற்கு எழுதினால் நான் எங்கிருந்தாலும் உங்கள் கடிதம் என் கைக்கு கிடைக்கும். என் உடலில் ஒரு துளி இரத்தம் இருக்கும் வரை, உலகம் முழுவதையும் காலால் சுற்றும் எண்ணத்தை கைவிடமாட்டேன்.

இங்கனம்,

டி. கே. இராஜகோபால்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

CONNEMARA PU
13 JUL 1957
MADRAS



எல்லோருக்கும்
என் வணக்கம்

# படித்துவிட்டு வேலை இல்லாமல் கஷ்டப்படும் வாலிபர்களுக்கு,

சிறு முதலைக் கொண்டு இந்த நாட்டில் எவ்வளவோ தொழில் செய்யலாம். ஊக்கம், உற்சாகம், உழைப்பு, பணம் தான் தேவை உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் இருக்கும் போது கவலை ஏன்? முழு விபரத்திற்கு தபால் ஒட்டிய கவரும், செலவுக்கு 8 அணா ஸ்டாம்பும், அனுப்பினால் உங்களுக்கு எங்கள் உதவி கிடைக்கும்.

## C/o சிறு தொழில்

D. K. ராஜகோபால்

No. 1, Aiyasami Chetty Street, Triplicane,

MADRAS-5.

CONNEMARA PUBLIC LIBRARY
13 JUL 1957
MADRAS

Learn to Write English Correctly!

You need not delve deep into the dry rules of Grammar!

Study:

**HOW TO WRITE ENGLISH CORRECTLY**

BY

N. SESHAGIRI RAO, B.A., B.L.

ADDITIONAL ADVANTAGE:

IDIOMS, PROVERBS, ABBREVIATIONS, DICTIONARY OF RARE & INTERESTING WORDS

**Price As. 8 only**

Copies can be had from

N. SESHAGIRI RAO, B.A., B.L.,
11/108, Madavaram Rd,
MADRAS-11.

or

P. T. BELL & Co.,
7, Sunkurama Chetty St,
MADRAS-1.